வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු








Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 24.01.2024 புதன்கிழமை | இதழ் : 24 | பக்கங்கள் : 12


## இலங்கை தமிழரசு கட்சியின்

# பொதுச் செயலர் பதவிக்கும் தேர்தல் நடக்கவே சாத்தியம்

## இதிலும் கட்சியின் மரபு மாறுவதற்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 24

**இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலரும் தேர்தல் மூலமே தெரிவாக வாய்ப்புள்ளதாக அந்தக் கட்சியின் உயர் வட்டாரங்கள் மூலம் அறிய வருகின்றது. அத்துடன், பொதுச் செயலர் பதவிக்கு வடக்கு, கிழக்கை சேர்ந்த ஆறு பேர் போட்டியிட தயாராகி வருகின்றனர் என்றும் தெரியவருகிறது.**

இதன் மூலம், தேர்தல் இன்றியே இதுவரை காலமும் பொதுச் செயலர் தெரிவு செய்யப்பட்டு வந்த சம்பிரதாயமும் மாற்றமடையலாம். அத்துடன், தலைவர் பதவியை வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர் வகித்தால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவருக்கு பொதுச் செயலர் என்ற மரபும் மாற்றமடைய சந்தர்ப்பம் உள்ளது.

அண்மையில், தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்கும் மரபை மாற்றி தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த சிறீதரன் வெற்றி பெற்று

11



## நயினை அம்மனுக்கு இன்று கும்பாபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஜன. 24

வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. காலை 09.38 மணி முதல் 11.20 மணி வரையிலான சுப நேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோபுரங்களுக்கு கலசம் வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து, நேற்றும் நேற்று முன்தினமும் எண்ணெய் காப்பு சாத்துதல் நடைபெற்றது.

11

## இவ்வருட கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தில் 8000 பக்தர்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 24

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் இவ்வருடம் இலங்கையிலிருந்து 4000 பக்தர்களும் இந்தியாவில் இருந்து 4000 பக்தர்களும் பங்குபற்ற அனுமதிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ் மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரம் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

பெப்ரவரி மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த

11

## சுதுமலையில் ஒரு வாரத்தில் 21 டெங்கு நோயாளர்கள்!

### 13 பேர் 10 வயதுக்கு உட்பட்டோர்

யாழ்ப்பாணம், ஜன. 24

சுதுமலையில் கடந்த வாரம் 21 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டனர். இவர்களில், 13 பேர் சிறுவர்களாவர். அதிலும் இவர்கள் அனைவரும் 10 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

இந்த நிலையில், அந்தப் பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர்

11

## தென்னிலங்கையில் தொடரும் பயங்கரம்

# பிக்கு சுட்டுக் கொலை!

கொழும்பு, ஜன. 24

தென்னிலங்கையில் நேற்றைய தினமும் பிக்கு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கம்பஹா - மல்வத்துஹிரிபிட்டியில் உள்ள கஹடானகணாராம விகாரைக்கு காரில் வந்த இனந்தெரியாத நால்வர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தேரர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்த பிக்கு 45 வயதுடையவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்துள்ளனர்.

11

# த. தே. கூட்டமைப்பை மீண்டும் உருவாக்க எத்தகைய விட்டுக் கொடுப்புக்கும் தயார்!

### தமிழரசு கட்சியின் புதிய தலைவர் சிறீதரன்

யாழ்ப்பாணம்,ஜன. 24

2009ஆம் ஆண்டுக்கு முன்னையது போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் உருவாக்குவதற்கு எத்தனை விட்டுக் கொடுப்புகளையும் - தியாகங்களையும் செய்யத் தயாராக உள்ளேன் - என்று இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கட்சியின் முக்கிய பலம் தமிழ்த் தேசியம். அது மாவீரர்களின் கல்லறையிலிருந்தே தொடங்க வேண்டும். இதனாலேயே, தலைமைப் பொறுப்பை ஏற்றவுடன் மாவீரர்

11



## மருத்துவர்களின் வேலைநிறுத்த போராட்டம் கைவிடப்பட்டது!

கொழும்பு, ஜன. 24

இன்றைய தினம் மருத்துவர்களால் முன்னெடுக்கப்படவிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்தது.

மருத்துவர்களுக்கான 35 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை தற்காலிகமாக இடைநிறுத்தி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை உடன்

11



## ஊர்காவற்றுறை பஸ் விபத்து; எண்மர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், ஜன. 24

இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸூம் தனியார் பஸ்ஸூம் ஊர்காவற்றுறையில் மோதி விபத்துக்கு உள்ளானதில் 8 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

11

## ஜனவரி மாத மின் கட்டணத்துக்கு நிவாரணம் எதிர்பார்க்காதீர்கள்!

### பெப்ரவரி நடுப்பகுதியிலேயே கட்டண திருத்தம்!

கொழும்பு, ஜன. 24

ஜனவரி மாதத்துக்கான மின்சார கட்டணத்தில் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் பெப்ரவரி நடுப்பகுதியில் மின்சார கட்டணங்கள் திருத்தப்படும் என்றும் நேற்று செவ்வாய்க்கிழமை அவர் கூறினார்.

மின்சார கட்டணத்தை திருத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கை ஒன்று இருப்பதாகத் தெரிவித்த அவர் அதற்கிணங்க மக்கள் கருத்துக் கணிப்பு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள மின்சார பாவனையாளர்கள் ஜனவரி மாதத்துக்கான மின்சார கட்டணத்தில் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது - என்றும் அவர் கூறியிருந்தார். (ஐ)

## மின்சாரம் தாக்கி இளைஞர் பலி!

தென்மராட்சி, ஜன. 24

தனது வீட்டில் மின் திருத்தப் பணியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந் தார்.

தென்மராட்சி - வரணி - இயற்றாலை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த 34 வயது இளைஞரே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம்

11

## ஊர்காவற்றுறை...

ஏனையவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர் என்று மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

பஸ் சாரதிகள் இருவரும் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. பயணி ஒருவரை ஏற்றுவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வீதியில் நிறுத்தப்பட்ட நிலையில் பின்னால் வேகமாக வந்த தனியார் பஸ் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் இரண்டு பஸ்களும் பலத்த சேதமடைந்தன. காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மருத்துவர்களின்...

நடைமுறைக்கு வரும் வகையில் இரத்து நேற்று மாலை இரத்துச் செய்யப்பட்டது. இதையடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டதாக ஊடகப்பேச்சாளர் மருத்துவர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாத சம்பளத்துடன் மருத்துவர்களுக்கு வழங்கப்படவிருந்த 35 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டதால் மருத்துவர்கள் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத் தில் ஈடுபடத் தீர்மானித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இவ்வருட...

மகோற்வம் சிறப்பாக இடம்பெற வுள்ள நிலையில் குறித்த ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய இந்த கூட்டம் நடத்தப்பட்டது.

குறித்த கூட்டத்தில், இவ்வருடம் இலங்கையிலிருந்து 4000 பக்தர்களும் இந்தியாவில் இருந்து 4000 பக்தர்களும் பங்குபற்ற அனுமதிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு பங்குபற்றுவோருக்கான சுகாதாரம், போக்குவரத்துஉட்பட அடிப்படை வசதிகள்,பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் உணவு வழங்கல் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் யாழ்.இந்திய துணைத் தூதுவராலய அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத்தந்தை, யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர், கடற்படையின் பிராந்திய பொறுப்பதிகாரி, பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் துறை சார் திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். (அ)

## பொதுச்...

தலைவராக உள்ளார். இந்த நிலையில், பொதுச் செயலர் பதவிக்கும் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர் தேர்தல் மூலம் தெரிவானால் 75 ஆண்டுகள் வரலாற்று பாரம்பரியம் கொண்ட அந்தக் கட்சியின் மரபு மாற்றமடையலாம்.

இதேநேரம், தமிழரசு கட்சியின் தலைவர் தேர்தலில் சிறீதரனின் வெற்றிக்காக உழைத்தவர்கள் மட்டக்களப்பை சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசனை முன்மொழிந்துள்ளனர். எனினும், பொதுச் செயலர் பதவிக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த துரைராஜசிங்கம், வடக்கை சேர்ந்த சேவியர் குலநாயகம் ஆகியோரும் போட்டியிட தயாராகி வருகின்றனர்.

எனினும், பொதுச் செயலர் பதவி தொடர்பில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள மத்திய குழுக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பது நினைவில்கொள்ளத்தக்கது. (ஐ)

# உத்தேச நிகழ்நிலை சட்டம்; பாராளுமன்றில் விவாதம்!

## 33 மேலதிக வாக்குகளால் முடிவு

கொழும்பு, ஜன. 24

உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவந்த நிலையில், குறித்த சட்டமூலம் மீதான விவாத்தை ஏற்கனவே தீர்மானித்ததற்கு அமைய நடத்த வேண்டும் என ஆளும் கட்சியினர் தெரிவித்து வந்தனர். அதனால் சபையில் ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மத்தியில் கடும் வாக்குவாதம் நடந்தது.

இதனால் சபையை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்காக உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை சபையில் விவாதிப்பதா இல்லையா என தீர்மானிக்க வாக்கெடுப்புக்கு செல்லவோம் என தெரிவித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில் பெரும்பான்மையினர் விவாதத்தை நடத்த வேண்டும் என வாக்களித்ததன் பிரகாரம் உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் காலை 9.30 மணிக்கு கூடியது.

பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து, பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் வேறு ஒரு தினத்தில் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட சிலர் என்னிடம் கேட்டுக்கொண்டனர்.

அதேநேரம் உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கையும் இன்று (நேற்று) காலையிலேயே கிடைக்கப்பெற்றுள்ளது.

அதனால் இது தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூடி தீர்மானிப்போம் என சபாநாயகர் சபைக்கு அறிவித்து காலை 9.55 மணியளவில் சபை நடவடிக்கையை தற்காலிகமாக ஒத்திவைத்தார்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் பாராளுமன்றம் 10.55 மணியளவில் கூடியது. இதன்போது எழுந்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசிலயமைப்பு மற்றும் நிலையியல் கட்டளையின் பிரகாரம் சட்டமூலம் ஒன்று தொடர்பில் சபையில் விவாதிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் துறைசார் மேற்பார்வை குழுவில் ஆராயப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அவ்வாறான எந்த அறிக்கையும் நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் தொடர்பில் சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறான நிலையில் குறித்த சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது பாராளுமன்ற நிலையியல் கட்டளைக்கும் அரசமைப்புக்கும் முரணாகும்.

அத்துடன், உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலத்தில் 57 திருத்தங்கள் இருக்கின்றன. அதில் 34 திருத்தங்களை உயர் நீதிமன்றம் முன்வைத்திருக்கின்றன.

அந்த திருத்தங்கள் தொடர்பில் துறைசார் மேற்பார்வைக்குழுவில் ஒவ்வொன்றாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்காமல் அது தொடர்பில் விவாதிக்க முடியாது. அதனால் இந்த விவாதத்தை இன்றைய தினம் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களான கஜேந்திரகுமார பொன்னம்பலம், ஜீ. எல். பீரிஸ். விமல் வீரவன்ஸ, லக்ஷ்மன் கிரியெல்ல, அநுரகுமார திஸாநாயக்க, ஷரித்த ஹேரத் ஆகியோரும் இந்த கருத்தை முன்வைத்து, குறித்த சட்டமூலம் தொடர்பில் எந்த அறிக்கையும் இல்லாமல் விவாதிப்பது சட்டத்துக்கு முரண் என்ற விடயத்தை தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து எழுந்த சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, சட்டமூலம் ஒன்றை கொண்டுவரும்போது பின்பற்ற வேண்டிய அனைத்து முறைமைகளையும் பின்பற்றியே உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

சட்டமூலம் தொடர்பாக துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கையும் சமர்ப்பித்திருக்கிறோம். அதனால் ஏனைய சட்டமூலங்கள் போன்று இதுவும் சாதாரண சட்டமூலத்துக்குரிய வழிமுறைகள் பின்பற்றப்பட்டு கொண்டு வரப்பட்டிருப்பதால், இந்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகர் உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் மீதான விவாதத்தை நடத்த சபை இணக்கமா என கேட்டபோது, எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுந்து அதற்கு எதிர்ப்பை வெளியிட்டு வாக்களிப்பு நடத்துமாறு கோரினார்.

அதனை அடுத்து பாநாயகர் வாக்களிப்புக்கு செல்லுமாறு உத்தரவிட்டு கோரம் மணியை ஒலிக்க உத்தரவிட்டார். அதன் பிரகாரம் வாக்களிப்பு இலத்திரனியல் முறையில் இடம்பெறறது. வாக்களிப்பில் ஆளும் தரப்பினர் ஆதரவாகவும் எதிர்க்கட்சிகள் எதிராகவும் வாக்களித்தனர்.

இதனடிப்படையில் சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என 83 வாக்குகளும் எதிராக 50 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதன் பிரகாரம் 33 மேலதிக வாக்குகளால் உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் மீதான விவாதம் நடைபெறும் என சபாநாயகர் அறிவித்தார். (ஐ)

## த.தே.கூ...

துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்தி புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

புலம்பெயர் தேசத்தை சேர்ந்த பிரபல ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காண லிலேயே மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அந்த நேர்காணலில், "தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த தமிழ்த் தேசிய சக்திகளின் அணிகளை அனைத்தையும் ஒன்றிணைப்பேன். தலைமை என்ற எதிர்பார்ப்பின்றி அனைவரையும் ஒன்றிணைக்க என்னால் முடிந்த இயன்ற முயற்சிகளை மேற்கொள்வேன். இதற்காக எத்தனை விட்டுக் கொடுப்புகளையும் - தியாகங்களையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன். தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்கும் பயணத்தை நோக்கி அனைவரையும் அரவணைத்து தியாக உணர்வோடு உழைக்க வேண்டும்.

"13ஆம் திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடையாது. ஒற்றையாட்சிக்குள் எட்டப்படும் தீர்வு எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றாது. 13 இல் உள்ள பல விதிகளை இலங்கை அரசு மாற்றியுள்ளது. 13இன் மூலமாக தீர்வை எட்ட முடியும் என்றும் நாம் யாரும் நினைக்கவில்லை. தமிழரின் நிலம், மொழி - கலாசார அடையாளங் கள் அங்கீகரிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் இணைந்த ஒரு தீர்வை நோக்கியே நாம் பயணிக்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்கள் இந்த மண்ணின் பூர்வீக மக்கள் என்பதை அங்கீகரிக்க வேண்டும். தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக்குழு என்பதை அங்கீகரிக்க வேண்டும். எங்கள் பயணம் இந்தத் திசையிலயே அமைகிறது. அதற்கான நேரம் நெருங்கிவிட்டது என்று நம்புகிறோம்.

மற்றக் கட்சிகளுடன் இணைந்து பொதுவான ஒரு தளத்தில் பயணிக்கவும் - பொதுவான அரசியல் கொள்கையை உருவாக்கவும் வழியேற்படுத்துவேன். முன்னதாக, வடக்கு, கிழக்கில் உள்ள சிவில் சமூக மற்றும் தமிழ்த் தேசிய செயல்பாட்டாளர்களை ஒன்றிணைத்து அவர்களுடன் வெளிப்படையான ஜனநாயக உரையாடலை நடத்துவதுடன், புலம்பெயர் நாடுகளிலுள்ள அமைப்புகளுடனம் பேச்சுகளை நடத்துவேன்- என்று கூறியுள்ளார்.

## மின்சாரம்...

இடம் பெற்ற இந்த சம்ப வத்தில் உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் அளிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## நயினை...

இன்றைய தினம் நடைபெறும் கும்பாபிஷேகத்துக்கு சிவசிறீ ப. மு. பாலகுமார குருக்கள் பிரதம சிவாச்சார்யராக இருந்து கிரியைகளை நடத்தி வைப்பார். அவருடன், நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் சிவாச்சாரியர்கள் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன், இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் பங்கேற்க புலம்பெயர் நாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் வருகை தந்துள்ளனர். பக்தர்களின் வசதி கருதி போக்குவரத்து மற்றும் சுகாதார வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் ஆலய நிர்வாகம் தெரிவித்தது. (ஐ)

# யாழில் இன்று கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 24

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ)

## பிக்கு...

நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை - தங்காலை - பெலியத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் உட்பட ஐவர் உயிரிழந்தனர். இந்த நிலையில், இந்தச் சம்பவம் தென்னிலங்கையில் அச்சநிலையை அதிகரித்துள்ளது. (ஐ)

## சுதுமலையில்...

ம. ஜெயபிரதீப் தலைமையிலான குழுவினர் வீடு தரிசிப்பு நடவடிக் கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த 23 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டது.

இதனிடையே, வீட்டு வளாகத்தில் நுளம்பு குடம்பி கண்டுபிடிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் நால்வருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. இதில் குற்றவாளிகளாக காணப்பட்ட அவர்களுக்கு தலா 4 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-3)

## இப்படியும் நடக்கிறது

தமிழர் அரசியலில் என்னதான் நடக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது.

புதிதாகப் பதவியேற்றுள்ள இந்தியத் தூதுவர் நேற்றுமுன்தினம் தமிழ் கட்சிகளின் தலைவர்களை ஒன்றாக சந்தித்திருந்தார்.

அந்தச் சந்திப்பில் அவர் 'தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இந்தியப் பிரதமர் மோடி தொடர்ந்தும் ஆர்வமாக உள்ளார். இது விடயத்தில் அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பார். எம்மைப் பொறுத்தவரை அழுத்தம் கொடுக்க மட்டுமே முடியும்' என்று தெரிவித்திருக்கிறார்.

உண்மைதான், இந்தியா விரும்பினாலும்கூட தமிழ் தரப்புகள் கேட்பதுபோல வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபைக்கு மட்டுமல்ல, வடக்கு-கிழக்கு என்று தனித்தனி மாகாணங்களுக்குக்கூட தேர்தலை வைக்கச் சொல்லி கேட்கலாமே தவிர இந்தியாவால் தேர்தலை நடத்த முடியாது.

அவர் ஏன் இவ்வாறு பதிலளித்தார் என்பது அங்கே சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தலைவர்கள் என்ன கேட்டிருப்பார்கள் என்பதை தெரிந்தவர்களுக்கு புரியும்.

அதுவல்ல கவனத்திற்குரியது -

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியதாக வெளியான செய்தியைத்தான் திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டியிருந்தது.

அவர் கூறியதாக வெளிவந்த செய்தியின் சாராம்சம் இதுதான்:

"ஒற்றையாட்சிக்குள் - 13ஆம் திருத்தத்துக்குள் எமக்கான தீர்வை முடக்கப் பார்க்கிறார்கள். நாம் உயர்ந்தபட்ச கோரிக்கைகளை முன்வைக்கும்போது அரசாங்கம் குறைந்த தீர்வையே முன் வைக்கிறது. விடுதலைப் புலிகள் தனிநாட்டை கோரியபோது சமஷ்டி தீர்வு குறித்து பேசினார்கள். சமஷ்டியை கேட்டபோது 13 என்றார்கள். இப்போது 13ஐ கேட்கின்றபோது 13 மைனஸ் என்றே கூறுகிறார்கள். எனவே, நாம் உயர்ந்தபட்ச கோரிக்கைகளையே முன்வைக்க வேண்டும். தீர்வு குறித்து பேசுவதானால் ஏனைய எமது நண்பர்களையும் (தமிழ் கட்சிகளையும்) அழைக்க வேண்டும்",

- மேற்சொன்னதுதான் கஜேந்திரகுமார் கூறியதாக வெளிவந்த செய்தி.

விடுதலைப் புலிகள் தனிநாட்டைக் கோரியபோது, சமஷ்டி தருவதாகச் சொன்னார்கள். இப்போது பதின்மூன்றைக் கேட்கின்றபோது பதின்மூன்று மைனஸ் என்கிறார்கள் என்றிருக்கிறார்.

உண்மைதான், அவரது கவலை நியாயமானதுதான். ஆனால், அது எதனால் என்பதையும் அவர் புரிந்துகொள்ளாமல் இருக்கமாட்டார். விடுதலைப் புலிகள் மிகப் பெரிய சக்தியாக உலகத்தையே திரும்பிப் பார்க்கவைக்கும் அளவுக்குப் பலமாக இருந்தபோது, அவர்கள் கேட்ட தமிழீழத்தை கொடுக்கமுடியாது என்பதால் சமஷ்டியை கொடுத்தாவது நாடு பிரிவதை தடுப்போம் என்று நினைத்தார்கள்.

பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக - பலமான அரசியல் சக்தியாக எழுந்து நின்றபோது அதாவது பதினைந்து எம்.பி.க்களுடன், ஒரு பிரதமர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அவரைக் காப்பாற்றக்கூடிய பலத்தோடு இருந்தபோது - சமஷ்டி கேட்டபோது பதின்மூன்று என்றார்கள்.

இப்போது கூட்டமைப்பு பல கட்சிகளாக பிரிந்து - சிதறி சின்னாபின்னப்பட்டு நிற்கின்ற போது - பதின்மூன்றை கேட்கின்றபோது, பதின்மூன்று மைனஸ் என்கிறார்கள். இனி என்ன? இன்னும் சில ஆண்டுகளில் பதின்மூன்று மைனஸ் என்றாலும் பரவாயில்லை என்கின்றபோது, மாகாண சபைகளையே தேவையில்லை என்பார்கள்.

இவை எதனால் என்பதை புரிந்துகொள்ள அரசியலில் கலாநிதி பட்டம் பெறவேண்டும் என்பதல்ல. கூட்டமைப்பு பலமாக இருந்தபோது அதாவது சமஷ்டி கேட்டபோது பதின்மூன்று பிளஸ் என்று அவர்கள் சொன்னபோது - அதனை ஏற்றுக் கொண்டிருந்தால், அதுவாவது கிடைத்திருக்கும்.

இதனால்தான்- அதாவது நிலைமைகளை சரியாகப் புரிந்துகொண்டதால்தான் இந்தியத் தூதுவர், அரசியல் ரீதியாக நீங்கள் பலம் பெறவேண்டுமானால், எல்லோரும் ஒற்றுமையாக பயணம் செய்யுங்கள் என்று ஆலோசனை சொல்லி அனுப்பியிருக்கிறார்.

இந்த நேரத்தில்தான், தமிழரசு கட்சியின் புதிய தலைவர் விடுத்திருக்கின்ற அழைப்பு அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் மௌனிக்கப்படுவதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படி அரசியல் ரீதியாக தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக இருந்தார்களோ அதேபோல தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் பழைய பகைமைகளை மறந்து ஒன்றுபடவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார். இந்த அழைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் சேர்த்துத்தான் விடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அவர்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த அழைப்புப் பற்றி பொதுவெளிகளில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொருவரும் தத்தம் விருப்பு - வெறுப்புகளுக்கு அமைய கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

கூட்டமைப்பிலிருந்து சில கட்சிகள் முதலில் வெளியேறின. ஆனால், பின்னர் கூட்டமைப்பிலிருந்து தமிழரசும்தான் வெளியேறியது.

வெறுமனே அழைப்பு விடுப்பதோடு நின்றுவிடாது, அதற்கான முயற்சியில் ஆக்கபூர்வமாக ஈடுபட வேண்டும்.

**- ஊர்க்குருவி.**

## வடதாரகையின் திருத்தப் பணியை விரைவுபடுத்த அரச அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

வடதாரகை படகின் திருத்தப் பணியை விரைவுபடுத்துமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு பணிப்புரை வழங்கினார்.

கச்சதீவு முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் மேற்படி பணிப்புரையை அவர் வழங்கினார்.

அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்-

குறிகட்டுவான் - நெடுந்தீவு சேவையில் ஈடுபடும் வடதாரகை படகு அண்மைய நாட்களில் திருத்தப் பணிக்காக காங்கேசன்துறை கடற்படை முகாமில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வழமையாக கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களின் கடற் பயணத்திற்கு வடதாரகை படகு ஒத்துழைப்பை வழங்கியிருந்த நிலையில் எதிர்வரும் மாதம் கச்சதீவு அந்தோனியார் உற்சவம் இடம்பெறவுள்ளது. அதற்கு பக்தர்களை கச்சதீவுக்கு ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடுவதற்கு வடதாரகை படகு மிக முக்கியமானது.

குமுதினி படகினை பயன்படுத்தினால் நெடுந்தீவிற்கான போக்குவரத்து பாதிக்கும்.

இம்முறை உற்சவத்தின் போது வடதாரகை சேவைக்கு அமர்த்தப்படாதவிடத்து கச்சதீவு செல்லும் பக்தர்களின் கடற்பயணத்தில் பெரும் இடர்பாடான நிலை காணப்படும்

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இதனை புரிந்து கொண்டு கச்சதீவு ஆலய உற்சவத்திற்கு முன்னர் வடதாரகை படகின் திருத்தப் பணியினை நிறைவு செய்து சேவையில் ஈடுபடுத்தவேண்டும்-என்றார்.

(அ-03)

## சமூக ஊடகங்களில் ஆபாசப்படங்கள் பல மடங்குகளாக அதிகரித்துள்ளன!

கொழும்பு, ஜன. 24

கடந்த வருடம் சமூக வலைத் தளங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேலான நிர்வாணப்படங்கள் பரிமாறப்பட்டன என தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், 8000 சைபர் குற்றங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்த விவாதத்தை நேற்று பாராளுமன்றத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 இன் முதல் வாரங்களில் சமூக ஊடகங்களில் 500 இற்கும் மேற்பட்ட ஆபாசப்படங்களை தங்களிடையே பரிமாறிக்கொண்டுள்ளனர். கடந்த வருடம் 6690 இணையவழி குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த புள்ளிவிவரங்கள் சிஐடியினரால் பதியப்பட்டவை மாத்திரமே. வெளிவராத சம்பவங்கள் பல இருக்கலாம்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குற்றங்களை கட்டுப்படுத்தும் நோக்கத்தையும் கிளர்ச்சிகள் இனமத ஐக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் குழப்பங்களை கட்டுப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டவை.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை பயன்படுத்தி எவரையும் பழிவாங்கும் நோக்கமில்லை - என்றார்.

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் 7 ஆண்டுகள் நிறைவு!

வவுனியா, ஜன. 24

வவுனியாவில் தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவரும் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினர் போராட்டம் ஆரம்பித்து 7 ஆவது ஆண்டு நிறைவை நேற்று செவ்வாய்க்கிழமை கடைப்பிடித்தனர்.

இதையொட்டி, வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றையும் அவர்கள் நடத்தினர்.

இதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்கள்,

காணாமல் ஆக்கப்பட்ட நமது அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிப்பதில் நமது முயற்சிகளை வலுப்படுத்துவதே எங்கள் அர்ப்பணிப்பாகும், மேலும் நமது தைரியத்தின் ஆதாரம் நமது இறையாண்மையில் உள்ளது.

இந்த இடத்தில் எங்களின் ஏழாவது ஆண்டு கடினமான பணி இன்றுடன் நிறைவுபெற்று 8 ஆவது ஆண்டை தொடர்கிறது. நமது இறுதி இலக்கான இறையாண்மையை அடைவதற்கு இடைவிடாமல் பாடுபடும்போது நமது உறுதி அசையாது. காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ்ப் பிள்ளைகளின் இருப்பிடம் தொடர்பில் விசாரணை செய்வதற்குத் தேவையான அதிகாரத்தை இதன் மூலம் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

நாங்கள் எங்கள் பிரசாரத்தை பல நாடுகளுக்கு விரிவுபடுத்துகிறோம். மேலும் போராடும் தமிழர்களின் சார்பாக வாதிடுவதற்கு ஐரோப்பா மற்றும் பிற பிராந்தியங்களுக்குச் செல்ல விரும்பும் நபர்களைத் நாடி வருகிறோம்.

எங்கள் வெளிநாட்டுக் குழுவின் பிரசாரத்துக்கு ஆதரவளிப்பதில் பல பொறுப்பை ஏற்க அனைத்து நாடுகளிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். இந்த ஆதரவு, வாக்கெடுப்பு தொடர்பான நமது பார்வையை திறம்பட வாதிட எங்களுக்கு அதிகாரம் அளிக்கும் - என்றனர்.

(ஐ)

## சொந்த தலைவர்களாலேயே சிதைக்கப்பட்ட அரசாங்கம்!

### ராஜபக்ஷக்களை விமர்சித்த எஸ்.பி.

கொழும்பு, ஜன. 24

69 இலட்சம் மக்களின் ஆணை மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி கட்டிலில் ஏறிய அரசாங்கம் அதன் சொந்த தலைவர்களாலேயே சிதைக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெரும்பான்மையான ஆணையை வழங்கிய நிலையில் உருவாக்கப்பட்ட அரசாங்கம் எங்கள் சொந்த தலைவர்களால் சிதைக்கப்பட்டதில் தான் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அதிபருக்கு இருந்தாலும், ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை எவராலும் மாற்ற முடியாது என அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம் நான்கு வருடங்களின் பின்னர் அதிபர் எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தை கலைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.01.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், தை 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியத் தூதுவர் கூறியதும் கூறாததும்

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் உத்தியோகபூர்வமாக தமிழ் உரிமைவாத கட்சிகளை சந்தித்திருக்கின்றார். அவர் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் இடம்பெறும் முதலாவது சந்திப்பு. வழமைபோல் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அரசியல் தீர்வில் இந்தியாவின் ஈடுபாட்டை கோரியிருக்கின்றனர்- அதற்காக இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றனர்.

வழமைபோல் இந்தியத் தூதுவரும் இராஜதந்திர மொழியில் பதிலளித்திருக்கின்றார். நாங்கள் விடயங்களை வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரதமர் மோடிக்கும் இடையில் மூடிய அறைக்குள் இடம்பெற்ற சந்திப்பின்போதுகூட பிரதமர் இந்த விடயங்களை வலியுறுத்தியிருக்கின்றார். எங்களால் கூறத்தான் முடியும் - நாங்கள் கூறிக்கொண்டுதான் இருக்கின்றோம். அதேவேளை, நீங்கள் தமிழ் மக்களின் விடயங்களில் ஒன்றாக நிற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

நாங்கள் கூறிக்கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால், விடயங்களில் முன்னேற்றங்களை காண்பிக்க வேண்டிய இலங்கையின் ஆட்சியாளர்கள் முன்னேற்றங்களை காண்பிக்காமல் இருக்கின்றனர் என்பதுதான் அவர் கூறியிருப்பது. இதற்கப்பால், இந்தியா என்ன செய்ய முடியும் என்னும் கேள்வியும் இருக்கின்றது. அந்தக் கேள்வி தொக்கி நிற்கின்றது. இன்றுள்ள உலக அரசியல் நெருக்கடிகளில் பலம்பொருந்திய நாடுகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் சிறிய நாடுகள்மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது - அவ்வாறு பிரயோகிப்பதாயின் இராணுவ பலத்தைத்தான் பிரயோகிக்க வேண்டும்.

இலங்கைமீது அவ்வாறான இராணுவ பிரயோகத்தையும் இந்தியா செய்திருக்கின்றது. ஆனால், அன்றைய சூழலில், இந்தியாவின் அணுகுமுறைகள் இந்தியாவுக்கு பாதகமாகவே அமைந்திருந்தன. இதற்குக் காரணம் என்னவென்பதும் எமது முன்னைய தலையங்கங்களில் குறிப்பிட்டிருக்கின்றோம். அதுபற்றி தொடர்ந்தும் பேசுவதில் பயனில்லை. ஆனால், ஓர் உண்மையை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - அதாவது, பேருந்தை தவறவிட்டுவிட்டு பின்னர் கைகாட்டிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அதற்கு நாம் என்ன காரணத்தையும் கூறலாம். ஆனால், பேருந்து சென்றுவிட்டது - அது எப்போது திரும்பிவரும் என்று நமக்கும் தெரியாது. வரும்வரையில் காத்திருக்க வேண்டும் அல்லது பேருந்தை மீண்டும் வர வைப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும்.

வெறுமனே இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பிவிட்டு அமைதியாக இருந்தால் எதுவும் நடக்காது. தமிழ் மக்கள் விடயத்தில் அழுத்தங்களை ஏற்படுத்துவதற்காக தமிழ்க் கட்சிகள் உறுதியுடன் இயங்க வேண்டும். இதுவரையில் தமிழ் உரிமைவாத கட்சிகள் ஒன்றிணைந்து மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும். இந்த விடயத்தில் இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று கூறி வடக்கு, கிழக்கில் ஒரு கடையடைப்பை செய்திருக்கின்றனவா? இந்திய - இலங்கை ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தம் தமிழ் மக்களின் சார்பில் இந்தியாவே கையெழுத்திட்டிருக்கின்றது - எனவே, இந்தியாவின் தலையீட்டை நாம் கோருகின்றோம் என்று கூறி ஓர் அடையாள உணவு தவிர்ப்பு செயல்பாட்டை முன்னெடுத்திருக்கின்றனவா, ஒரு பேரணியை நடத்தியிருக்கின்றனவா?

இவ்வாறு இங்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அதற்கான ஆதரவை வழங்குமாறு தமிழ்நாட்டிலுள்ள அரசியல் தரப்புகளையும் கோரலாம். ஒரே நேரத்தில் இவ்வாறான கோரிக்கைகள் இந்தியாவை நோக்கி முன்வைக்கப்படும்போது - அதுதான் இந்தியாவை திரும்பிப்பார்க்க வைக்கும். இந்தியாவை நோக்கி நாம் உண்மையாக இருக்கின்றோம் என்பதை தமிழ் கட்சிகள் தங்களின் தொடர்சியான செயல்பாடுகளால் நிரூபிக்க வேண்டும். அவ்வாறில்லாது வெறுமனே தமிழ்த் தேசிய கோஷங்களை எழுப்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை.ய மட்டுமே சந்தித்துக் கொண்டிருக்கின்ற ஓர் இனம். எனவே, நாம் முன்னோக்கி செல்ல வேண்டுமாயின் நமக்குள் ஐக்கியமாதல் வேண்டும். அதுதான் தமிழ்த் தேசிய அரசியலில் பண்பு மாற்றத்தின் முதல் படியாகும்.

# சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை புலம்பெயர் தமிழர்களுக்கு கொடுங்கள்

## அதானிக்கு கொடுத்தால் ஆபத்து என அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 24

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை இந்திய தொழிலதிபர் அதானிக்கு வழங்குவதால் தேசிய பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகும் என தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறிலங்கா ரெலிக்கொம் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையது, ஜனாதிபதி செயலகம், பொலிஸ் திணைக்களம், உள்ளிட்ட முக்கிய அனைத்து அரச நிறுவனங்களும் டெலிகொம் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதனை வேறு நாட்டைச் சேர்ந்த தனியாருக்கு வழங்குவது தேசியப் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும்.



இந்நிலையில், தொலைத் தொடர்பு நிறுவனத்தை தனியாருக்கு வழங்க வேண்டுமானால், உள்ளூர் தொழிலதிபர்களுக்கு வழங்க வேண்டும்.

அரச துறையில் பணிகள் மெதுவாகவே இடம்பெறுகின்றன. ஆனால் தனியார் துறையில் அப்படியில்லை. பொதுவான தனியார் வங்கிக்குச் சென்றால் பணிகள் விரைவாக முடிந்து விடும். ஆனால் அரச வங்கியில் அப்படியில்லை.

எனவே நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துங்கள். ஆனால் உள்ளூர் தொழிலதிபர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். நம் நாட்டில் எத்தனை கோடீஸ்வர தொழிலதிபர்கள் உள்ளனர்?

புலம்பெயர் தமிழ் மக்களை முதலீடு செய்ய வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இது சிறந்த யோசனை, புலம்பெயர் தமிழ் மக்களிடம் பணத்தை பெற்றுக் கொண்டு இந்த அரச நிறுவனங்களை மறுசீரமைக்க முடியும்.

ஏனெனில் இந்த நிறுவனங்கள் தற்போதைய அமைச்சர்களின் ஆட்களை நிரப்பி வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

எனவே, ரெலிக்கொம் உள்ளிட்ட அரசு நிறு வனங்களை தனியார் மயமாக்கினால், உள்ளூர் தொழிலதிபர்களுக்கு கொடுங்கள் என்று கூறுகிறோம். இல்லாவிட்டால் நாட்டின் தேசிய பாதுகாப் புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் - என்றார்.

# சிசிரிவி கண்காணிப்பில் சிக்கிய 125 சாரதிகள்

கொழும்பு, ஜன. 24

கொழும்பை சுற்றியுள்ள வீதிகள் நேற்று முன் தினம் சிசிரிவி மூலம் கண்காணிக்கப்பட்டு, 125 போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சிசிரிவி கமெரா மூலம் போக்குவரத்து விதிமீறல்களை கண்காணித்து வாகன உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கும் முன்னோடி திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பை சுற்றியுள்ள சிசிரிவி மூலம் அவதானிக்கப்பட்டுள்ள 125 போக்குவரத்து விதி மீறல்கள் இனங்காணப்பட்டுள்ளன.

ஆரம்பகட்ட நடவடிக்கையாக அந்த வாகனங்களின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இனங்காணப்பட்ட பிழைகளில் பிரதானமாக பாதையை மாற்றியமை மற்றும் நிறுத்தல் கோடுகளில் நிற்காமல் வாகனம் ஓட்டுதல் போன்ற தவறுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

# நாடளாவிய ரீதியில் 955 பேர் கைது!

கொழும்பு, ஜன. 24

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கையின் கீழ் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 955 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


அதன்படி போதைப் பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 633 சந்தேக நபர்களும் குற்றப் பிரிவு பட்டியலில் இருந்த 322 சந்தேக நபர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குற்றப் பிரிவு பட்டியலில் இருந்த 322 சந்தேக நபர்களில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 42 சந்தேக நபர்களும் போதைப்பொருள் அல்லாத குற்றங்கள் தொடர்பான திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 243 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது அவர்களிடம் இருந்து 187 கிராம் ஹெராயின், 126 கிராம் ஐ.ஸ் 14 கிலோ 700 கிராம் கஞ்சா, 148 கிராம் மாவா 136 போதை மாத்திரைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 24 புதன்கிழமை
சோபகிருது வருடம் - தை 10
நல்ல நேரம் : 09.30 - 13.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதிதாக ஆடை ஆபரணம் வாங்குவீர்கள்.

**மிதுனம்**
வியாபாரத்தில் வாடிக்கையாளர் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள். நன்மை ஏற்படும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம்.

**சிம்மம்**
உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகும் நபரால் பயனடைவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
உங்கள் பிடிவாதப்போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**துலாம்**
உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள்.

**தனுசு**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள்

**மகரம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பார்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும்.

**மீனம்**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வாகன வசதிப் பெருகும்.

# இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்க நேதாஜியே காரணம் காந்தியல்ல!

## ஆளுநர் ரவியின் பேச்சால் அதிர்வலை

சென்னை, ஜன. 24

மகாத்மா காந்தி முன்னெடுத்த சுதந்திரப் போராட்ட இயக்கத்தால் விடுதலை கிடைக்கவில்லை. நேதாஜியால் தான் விடுதலை கிடைத்தது என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி கூறியுள்ளார்.

அவரின் இந்தப் பேச்சு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு பேசினார்.

மேலும், “இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் வெளியேறிய பிறகு, சுதந்திரப் போராட்ட வீரர்களை மறந்துவிட்டோம். ஆனாலும், அவர்கள் நம் மரபணுவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நேதாஜியின் ஐ.என்.ஏ - விலிருந்த அதிகப்படியான வீரர்கள் தமிழர்கள். அதில் எனக்கு ஆச்சர்யமில்லை. இருந்தாலும், இந்த ஐ.என்.ஏ, இந்த மண்ணில் போதிய கவனம் பெறவில்லை ஏனென்று தெரியவில்லை.

வீரமங்கை வேலுநாச்சியார், பாரதியார், வ. உ. சி போன்றோர் இங்கு கொண்டாடப்படுகிறார்கள். ஆனால், இந்த மண்ணிலிருந்து பலர் நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர்த்தியாகம் செய்திருக்கிறார்கள். நேதா



ஜியுடன் இணைந்து போராடியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, நேதாஜி கொண்டாடப்பட வேண்டியவர் என்று எதிர்பார்ப்பது இயல்பானதுதான். ஆனால், உண்மை என்னவென்றால் குறிப்பிடத்தக்க அளவுக்கு நேதாஜி போற்றப்படவில்லை. நேதாஜி இல்லையென்றால் 1947இல் இந்தியா சுதந்திரமடைந்திருக்காது.

மகாத்மா காந்தி நடத்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் வரலாற்றைப் பாருங்கள், 1942இற்கு பிறகு ஒன்றுமே நடக்கவில்லை. அவர்கள் எல்லோரும் தங்களுக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். முகமது ஜின்னா தலைமையில், முஸ்லிம் லீக் தனி நாடு கேட்டுக்கொண்டிருந்தது. இது போன்றவற்றால் பிளவுபட்டோம். பிரிட்டிஷார் அதைப் பார்த்து சந்தோசப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

உண்மையில், இந்தியாவை இன்னும் பல ஆண்டுகள் ஆள்வதற்கு பிரிட்டிஷாருக்கு எந்தப் பிரச்னையும் இருக்கவில்லை. ஆனால், நேதாஜியின் இராணுவம், சண்டை போட்டுக்கொண்டிருந்தது. மேலும், 1945இல் ஐ.என்.ஏ தடைசெய்யப்பட்ட அடுத்த 6 மாதங்களில், பிரிட்டிஷ் கடற்படையிலிருந்த இந்திய வீரர்கள் கிளர்ச்சி செய்தனர். நாட்டின் சுதந்திரத்துக்காகப் பிரிட்டிஷ் அதிகாரிகளை சுட்டுக்கொன்றனர். 1946 பெப்ரவரியில் நேதாஜியால் இது நிகழ்ந்தது. அந்த அச்சத்தில், 1946 மார்ச்சில் இந்தியாவை விட்டு வெளியேறுவதாக முதன்முறையாக பிரிட்டிஷார் கூறினார்கள்.

சரியாக அடுத்த 15 மாதங்களில் சுதந்திரமடைந்தோம். ஆனால், அதிகளவில் இது பேசப்படவில்லை. இந்தியா விடுதலையடைந்த சமயத்தில் கொல்கத்தாவுக்கு வந்த பிரிட்டிஷ் பிரதமர் அட்லீ, “நாங்கள் வெளியேறியதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் காரணமல்ல. கடற்படையில் ஏற்பட்ட கிளர்ச்சிதான் அதற்குக் காரணம்” என்று அப்போது கொல்கத்தா ஆளுநராக செயல்பட்ட பிரணாப் முகர்ஜியிடம் கூறினார். தாய்நாட்டுக்காக நேதாஜி செய்ததை நாம் மீட்டெடுக்கவேண்டும். நேதாஜி, ஐ.என்.ஏ, அதில் தமிழ்நாட்டின் பங்களிப்பை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுசெய்ய வேண்டும்” என்றார். (ஐ)

# தேர்தல் கூட்டணி குறித்து விரைவில் அறிவிப்பேன்!

## கமல்ஹாசன் அறிவிப்பு

சென்னை, ஜன. 24

மக்களவைத் தேர்தலில் கூட்டணி குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல் ஹாசன் நேற்றுத் தெரிவித்தார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியில் மாவட்ட செயலாளர்களை நியமிக்கும் பணி நடந்து வருகிறது. இதைத் தொடர்ந்து மக்களவைத் தேர்தல் நெருங்கி வருவதால், தேர்தல் பணிகளில் அக்கட்சியினர் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதையொட்டி, நடத்தப்பட்ட செயல்குழு மற்றும் பொதுக் குழு கூட்டங்களில் பேசிய கமல்ஹாசன், தேர்தல் கூட்டணி குறித்து, பல்வேறு கட்சிகள் பேசி வருகின்றன. கூட்டணி குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை. கூட்டணி, கட்சி போட்டியிடும் தொகுதிகள் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் - என்றார். (ஐ)

# தமிழகம் முழுவதும் இராமர் தொடர்பில் எழுச்சியை ஏற்படுத்தியது தி. மு. க.தான்!

## அண்ணாமலை தெரிவிப்பு



சென்னை, ஜன. 24

தமிழகம் முழுவதும் அமைதியாக நடந்த இராமர் கோயில் திறப்புவிழா நிகழ்வில் பிரச்னையை உண்டாக்கி மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தியது தி. மு. கதான் என அண்ணாமலை தெரிவித்தார்.

சென்னை கோபாலபுரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி வீட்டின் அருகில் உள்ள வேணுகோபால சுவாமி கோயிலில் அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேக நிகழ்வு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதனை பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை பார்த்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் அண்ணாமலை கூறியதாவது,

“கோயில் அறங்காவலர் அழைத்ததன் பேரிலே கோபாலபுரம் வந்தேன். எத்தனையோ கட்சிகள், அமைப்புகள் இராமருக்கு செருப்பு மாலை போட்ட நிகழ்வுகள் நடந்திருக்கிறது. அமைதியான முறையில் நடந்து கொண்டிருந்த இந்த நிகழ்வில், பெரிய பிரச்னையை உண்டாக்கி, தமிழகத்தில் மக்களிடம் எழுச்சியை உண்டாக்கியது தி. மு. க.தான்.

தமிழக அரசு மக்களின் நம்பிக்கைக்கும், இந்து மக்களுக்கும் எதிராக இருக்கிறது என்பதை மீண்டும் ஊர்ஜிதம் செய்திருக்கிறது. 2024 மக்களவை தேர்தலில் தமிழக மக்கள் திமுகவுக்கு பாடம் புகட்டுவார்கள். இராமர் கோயில் நிகழ்வின் நேரடி ஒளிப்பரப்புக்கும், அன்னதானம், சிறப்பு பூஜைக்கும் அனுமதி கொடுக்க கூடாது என்று அறநிலையத் துறை வாய் மொழி உத்தரவு வழங்கி இருக்கிறது. அதே போல், காவல் துறையும் தடை விதித்திருக்கிறது.

தமிழகத்தில் தேவையில்லாத ஒரு துறை என்றால் அது அறநிலையத் துறை தான். எனவே 2026இல் பா. ஜ. க. தமிழகத்தில் ஆட்சிக்கு வரும்போது இந்து அறநிலையத் துறை இருக்காது - என்றார். (அ)

# 20 வீதத்துக்கும் அதிகமானோர் நீரிழிவு நோயினால் பாதிப்பு!

## 35 வயதுக்கு மேற்பட்டோரில் பலருக்கு உயர் இரத்த அழுத்தம்

**கொழும்பு, ஜன. 24**

**20 வீதத்துக்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்காசிய பிராந்தியத்தில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் அதிகளவில் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உள்ள நாடாகவும் இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது என கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.**

தட்டம்மை நோய் இந்நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த காலங்களில் தட்டம்மை நோய் மீண்டும் தலைதூக்கியதை யடுத்து, இவ்வாறான தடுப்பூசித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதே இந்த ஆண்டின் முக்கிய எதிர்பார்ப்பாகும். ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு மிகவும் தரமான சேவையை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. தொற்றா நோய்கள் தொடர்பில் இலங்கை பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது.

20 வீதத்துக்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்காசிய பிராந்தியத்தில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் அதிகளவில் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உள்ள நாடாகவும் இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயர் இரத்த அழுத்தம் தொடர்பான சிக்கல்களில் இதய நோய் மற்றும் பக்க வாதம் போன்ற பல நோய்கள் அடங்குகின்றன.

மேலும், வேகமாக முதுமையடையும் மக்கள் தொகை கொண்ட நாடென்ற வகையில், நினைவாற்றல் குறைபாடு, கண் நோய்கள், எலும்பு நோய்கள் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன.

எனவே, தொற்றாத நோய்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வேகமாக பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் ஆதரவு கிடைத்துள்ள போதிலும், இது தொடர்பாக பொதுமக்களின் ஆதரவு இப்பொழுதுள்ளதை விடவும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தற்போது அதிகரித்து வரும் தட்டம்மை நோயைத் தடுக்க பல்வேறு விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளோம். கடந்த சில வாரங்களில், 91 வீத குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை ஏற்ற முடிந்தது.

அத்துடன், தற்போதுள்ள மருந்துப் பற்றாக்குறையை போக்குவதற்கு பெருமளவிலான அத்தியாவசிய மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மருந்து தட்டுப்பாடு படிப்படியாக குறைந்து வருகிறது என்றே கூற வேண்டும். எதிர்காலத்தில், மருத்துவ விநியோகத் துறையையும், கொள்முதல் செயல்முறையையும் வெளிப்படையானதாக மாற்ற ஒன்லைன் முறையைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்காக ஏற்கனவே மொரட்டுவை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் கணினி துறைகளுடன் சுகாதார அமைச்சு கலந்துரையாடி வருகிறது - என்றார். (அ)

# மைத்திரிபாலவின் மகளின் வீட்டை உடைத்து திருட்டு

கொழும்பு, ஜன. 24

முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவின் மகளின் இரண்டு மாடி வீட்டை உடைத்து 30 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை திருடியுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தரமுல்லை, விக்கிரம சிங்க பகுதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவின் மகளின் கணவர் குறித்த வீட்டிற்கு வந்த போது வீட்டின் கண்ணாடி கதவு உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது. இதனையடுத்து பாதிக்கப்பட்டவர் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

குறித்த முறைப்பாட்டில், சில நபர்களால் வீட்டின் கண்ணாடி கதவு உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்கள் சில திருடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

வீட்டின் அலுமாரியில் இருந்த 150,000 ரூபா பெறுமதியான பணம் ,தங்கத்தினால் செய்யப்பட்ட ஒட்டகம் சிலை, கைக்கடிக்காரம், 8 சிங்கப்பூர் தங்க நாணயங்கள் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் அல்ல!

## தேசபந்து தென்னக்கோன் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 24

விசேட நடவடிக்கையை ஐ.நா உட்பட பல அமைப்புக்கள் விமர்சித்தாலும் இந்த நடவடிக்கையானது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலால் இயக்கப்படவில்லை என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பாதாளம் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் எங்களுக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இல்லை. அவர்களின் நடவடிக்கைகளை ஒழிப்பதே எங்களின் ஒரே இலக்கு என்றும் எவருடனும் தனிப்பட்ட பிரச்னைகள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நடவடிக்கையை எதிர்ப்பவர்கள் குற்றச் செயல்களால் ஆதாயம் அடைபவர்களாவர் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட முக்கிய நபர்களில் 65 வீதத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டதன் மூலம் போதைப் பொருள் இருப்புக்கள் கணிசமான அளவில் குறைந்துள்ளன.

மேலும் நாட்டின் போதைப் பொருள் கடத்தல் வலையமைப்புகளை முழுமையாக அகற்றும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதி நாடு திரும்பினார்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தூதுக்குழுவினர் வெளிநாட்டு பயணங்களை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி டுபாய் எமிரேட்ஸ் விமான சேவையின் இ.கே. 650 விமானத்தில் ஜனாதிபதி மற்றும் தூதுக்குழுவினர் நேற்று காலை 8.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

ஜனாதிபதி அங்கு இருந்த காலப்பகுதியில் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற பொருளாதார உச்சி மாநாடு, உகாண்டாவின் கம்பாலாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் தலைவர்களின் 19ஆவது உச்சி மாநாடு, ஜி-77 மற்றும் சீனாவின் 3ஆவது தெற்கு உச்சி மாநாடு ஆகியவற்றில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸாரைப் பயமுறுத்த நாயுடன் காரில் கடத்தி செல்லப்பட்ட ஐஸ் போதைப்பொருள்

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கைது

கொழும்பு, ஜன. 24

பொலிஸாரைப் பயமுறுத்துவதற்காக நாயுடன் காரில் கடத்திச் செல்லப்பட்ட ஐஸ் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கார், மோட்டார் சைக்கிள் மற்றும் நான்கு கைத்தொலைபேசிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் கிரிவத்துடுவ யகஹலுவ பிரதேசத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர்.

கிரிவத்துடுவ யகஹல்வ பிரதேசத்தின் ஊடாக ஐஸ் போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின்படி பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்புரையின்பேரில் அதிகாரிகள் குழுவொன்று கிரிவத்துடுவ யகஹலுவ பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன்போது அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

# உயர்தரத்தை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு பாடசாலையிலேயே தொழிற்கல்வி வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஜன. 24

உயர் தரத்தை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு எதிர் வரும் பெப்ரவரி மாதம் முதல் பாடசாலையிலேயே தொழிற் கல்வி வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி அறிவு கொண்ட தொழில்சார் கல்வி குறித்த நடைமுறை பயிற்சி மற்றும் கோட்பாட்டு ஒத்திகையுடன்கூடிய நிகழ்ச்சி இவ்வாறு நடத்தப்படவுள்ளது.

உயர்தரக் கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களை தொழிற்கல்விக்கு வழிநடத்தும் நோக்கில் இந்தத் தொழிற் பயிற்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 299 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உயர் தரப் பரீட்சைக்காக தோற்றியுள்ள மாணவர்கள் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி முன்னர் இந்தத் திட்டத்தில் பதிவு செய்யலாம்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விசேட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். (அ)

# வழிபாட்டுத் தலங்களை பாதுகாப்பது அவசியம்!

## எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

கொழும்பு, ஜன. 24

இலங்கை பிரஜைகள் என்ற வகையில், நாட்டின் உயரிய வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாப்பது நாட்டின் அனைத்துப் பிரஜைகளின் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தின் படி எமது நடத்தைகள் மற்றும் செயற்பாடுகள் உயர் விழுமியங்களை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும் எனவும், நாகரீகமான சமூகத்தில் பணிவாகவும் விவேகமாகவும் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

மேலும், தனது தந்தையான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்களும் தெவிநுவர விகாரைக்கு பல சேவைகளை செய்துள்ளதாகவும், அந்த சேவைகளை மேலும் தொடர்வதே தனது நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சர்ச்சைக்குரிய மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன

கொழும்பு, ஜன. 24

பாராளுமன்றம், அமைச்சரவை அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் இருந்தும் சர்ச்சைக்குரிய ஹியூமன் இமியூனோகுளோபியூலின் மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் தேவையான ஆவணங்கள் சில கோரப்பட்டுள்ளன.

குறித்த கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள குழுவினால் இந்த ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால், குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட வாக்குமூலத்திற்கு அமைய குறித்த ஆவணங்கள் கோரப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பாராளுமன்றம், அமைச்சரவை அலுவலகம், நிதி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகிய நிறுவனங்களிடம் இருந்து ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன.

தேவையான ஆவணங்களின் 90 வீதமானவை தற்போது விசாரணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை வழங்கப்படாத ஆவணங்களை விரைவாக வழங்குமாறு குறித்த நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாக திணைக்களம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து ஆவணங்களையும் ஆராய்ந்த பின்னர் அடுத்த கட்ட விசாரணைகளை, விசாரணைக் குழுவினர் முன்னெடுக்கவுள்ளதுடன் தேவைப்படும் பட்சத்தில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் மீண்டும் வாக்குமூலம் பெறப்படுமெனவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய ஹியூமன் இமியூனோகுளோபியூலின் மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம் ஆகியன இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் நாயகம் லக்மினீ கிரிஹாகமவின் தலைமையில் இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இதனிடையே, சர்ச்சைக்குரிய ஹியூமன் இமியூனோகுளோபியூலின் மருந்துகளை உற்பத்தி செய்ததாகக் கூறப்படும் சீதுவ, அமண்டொலுவ பகுதியில் அமைந்துள்ள நிறுவனம் நேற்று முன் தினம் சோதனைக்குட்படுத் தப்பட்டது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அதிகாரிகள் அடங்கிய குழுவினால் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த நிறுவனத்தின் உரிமையாளரும் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் மருந்து உற்பத்தி தொழிற்சாலையை சோதனையிட முயன்ற போது மின்தடை காரணமாக அந்த நடவடிக்கைக்கு இடையூறு ஏற்பட்டிருந்தது.

அதன் காரணமாக நேற்றைய சோதனை நடவடிக்கைக்கு முன்னதாக அந்த நிறுவனத்திற்கு மின்சார சபையினரால் தற்காலிகமாக மின்சாரம் வழங்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# வட்டி வீதங்கள் மாற்றமில்லை

கொழும்பு, ஜன. 24

இலங்கை மத்திய வங்கி, அதன் கொள்கை வட்டி விகிதங்களை தற்போதைய மட்டத்திலேயே தொடர்ந்தும் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை மீளாய்வுக் கூட்டத்தின் போது, குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய துணைநில் வைப்பு வசதி விகிதம் 9 சத வீதமாக 100 அடிப்படை புள்ளிகளால் தொடர்ந்தும் பேணப்படவுள்ளது.

அத்துடன், துணைநில் கடன் வசதி விகிதத்தை இலங்கை மத்திய வங்கி 10 சத வீதமாக 100 அடிப்படை புள்ளிகளால் தொடர்ந்தும் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது. (அ)

## ரூ.15 இலட்சம் பெறுமதியான
# ஐஸ் போதைப்பொருளுடன் 21 வயது யுவதி கைதானார்!

கொழும்பு, ஜன. 24

கிராண்ட்பாஸ் மஹவத்தை வீதியிலுள்ள வீடொன்றில் வைத்து சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த 21 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபரிடம் இருந்து 51 கிராம் 190 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வத்தளை பிரதேசத்தில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட நபரிடம் இருந்து ஐஸ் பெறப்பட்டமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளுக்காக மாளிகாகந்தை நீதிமன்றில் ஆஜர்படுத்தி 7 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 6 மனுக்கள்

கொழும்பு, ஜன. 24

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக 6 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன் நுண்கடன் மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டமூலத்துக்கு எதிராக 2 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் சபைக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது சபாநாயகர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 121 (1) சரத்துக்கு அமைய உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள துடன் அதன் பிரதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேபோல் நுண்கடன் மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டமூலத்துக்கு எதிராக அரசியலமைப்பின் 121 (1) சரத்துக்கு அமைய உயர்நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு அதன் பிரதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன - என்றார். (அ)

# 5,000 ரூபா கொடுப்பனவு ஆசிரியர் உதவியாளர்களுக்கும் வேண்டும்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 24

இந்த வருடத்தின் பட்ஜெட் ஊடாக, அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 5,000 ரூபாய் கொடுப்பனவு, ஆசிரியர் உதவியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர் உதவியாளர்களுக்கான நிரந்தர நியமனம் இதுவரை வழங்கப்படாத நிலையில் அவர்கள் தற்போதைய நெருக்கடியுடன் 10,000 ரூபாய் கொடுப்பனவில் பணியாற்றி வருகின்றனர்.

இதனால் அவர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

# மன்னார் விளாங்குளியில் புதிய பள்ளிவாசல் திறப்பு



மன்னார், ஜன. 24

ஸகாதுல் பவுண்டேஷனினால் மன்னார், விளாங்குளியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசலை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையுடன் இடம்பெற்றது.

ஸகாதுல் பவுண்டேஷனின் பணிப்பாளர் இஷாக் ஹஸன் அப்பாஸி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தார். (அ)

# ஹரக் கட்டாவுடன் தொடர்பை பேணிய மற்றுமொருவர் கைது

கொழும்பு, ஜன. 24

தற்போது குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பில் தடுப்பு காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும், திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுவின் தலைவரான ஹரக் கட்டாவுடன் தொடர்பை பேணிய மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, வெல்லம்பிட்டி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதானவர் வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் என குறிப்பிடப்படுகின்றது. (அ)

# சமன் பெரேராவின் வீட்டில் சோதனை!

கொழும்பு, ஜன. 24

பெலியத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த அபி ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேராவின் குருநாகல் வீட்டை விசேட பொலிஸ் குழுவினர் பிற்பகல் சோதனையிட்டனர்.

பொலிஸ் குழுவானது பொலிஸ் நாய்களைப் பயன்படுத்தி வீட்டை முழுமையாகச் சோதனை செய்ததாகவும், வீட்டில் சட்டவிரோதமான பொருள் எதுவுமில்லை என்றும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், வீட்டில் பதுங்கு குழி போன்ற அறை இருந்ததாகவும், அங்கிருந்த பொருட்களைச் சோதனை செய்ததாகவும் மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

சமன் பெரேராவின் வீட்டில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. (அ)

# 17 மாதங்களில் 18 முறை வெளிநாடு சென்ற ரணில்

## மக்களின் பலத்துடன் அரசாங்கம் விரட்டியடிக்கப்படும் என்கிறார் சஜித்



கொழும்பு, ஜன. 24

**வங்குரோத்து அடைந்த நாட்டை கட்டியெழுப்புவதற்காக பதவிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 17 மாதங்களில் 18முறை வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதாகவும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளால் நாடு அழிவை நோக்கி கொண்டு செல்லப்படுவதாகவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டு மக்களின் துன்ப, துயரங்களை கவனத்தில் கொள்ளாது நாட்டின் தலைவர் மக்களின் பணத்தில் வெளிநாடு செல்கிறார்.

வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் இந்த பயணங்களுக்கு போதவில்லை என்பதால், மேலும் 200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டை சிங்கப்பூராக மாற்ற போவதாகவும் கயிற்று பாலத்தில் சென்று நாட்டை கட்டியெழுப்ப போவதாகவும் கூறினாலும் வரிசைகளில் இறந்த, தரமற்ற மருந்து காரணமாக உயிரிழந்த மற்றும் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டவர்களுக்கு இதுவரை நீதியும்,நியாயமும் கிடைக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நாடு வங்குரோத்து அடைந்ததால், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்படும்.

தற்போதைய அரசாங்கத்தின் தவறான கொள்கைகள் காரணமாக நாடு அழிந்துள்ளது.

உற்ற நண்பர்களின் முதலாளித்துவ கொள்கையை பின்பற்றும் அரசாங்கத்தை மக்களின் பலத்தின் மூலம் விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

# பாலியல் தொழிலை சட்டமாக்கும் கொள்கை எங்களிடம் கிடையாது!

## கூறுகின்றார் ரில்வின் சில்வா

கொழும்பு, ஜன. 24

பாலியல் தொழிலை சட்டமாக்கும் கொள்கை தேசிய மக்கள் சக்தியிடம் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் சமூகத்தில் கௌரவமான பங்காளிகளாக பெண்கள் மாற்றப்படுவார்கள்.

அத்துடன் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளின் அடிப்படையில்,உடலை விற்க நேரிடாது. பொருளாதாரத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவதே எமது கட்சியின் கொள்கை.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உடலை விற்கும் பெண்கள் எமது நாட்டில் உள்ளனர். அவர்கள் இதனை விரும்பி செய்யவில்லை. பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் அவர்களை அந்த இடத்தை நோக்கி தள்ளியுள்ளது.

சகல பெண்களும் கௌரவமாக வாழும் நாட்டை உருவாக்குவதே எமது கொள்கை. உடலை விற்பது கௌரவம் அல்ல என்பதை அனைவரும் அறிவோம் - என்றார்.

(அ)

# மனித-யானை மோதலால் அதிகரிக்கும் உயிர்ச்சேதம்

கொழும்பு, ஜன. 24

மனித மற்றும் யானை மோதல் காரணமாக ஏற்படும் உயிர்ச்சேதம் ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

இதன்படி, 2022 ஆம் ஆண்டில் மனித மற்றும் யானை மோதல் காரணமாக 435 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 2023 ஆம் ஆண்டில் குறித்த எண்ணிக்கை 470 ஆக அதிகரித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் உயிரிழந்த மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு 376 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டுள்ள வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், குறித்த காலப் பகுதியில் உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை 191 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி 83 யானைகளும், மின்சாரம் தாக்கி 66 யானைகளும், வெட்டப்பட்ட நிலையில் 47 யானைகளும், விஷம் உற்கொண்டு 23 யானைகளும் உயிரிழந்துள்ளன.

அத்துடன், வீதி விபத்துகள் மற்றும் நீரில் மூழ்கி 02 யானைகளும், தவறி விழுந்து 05 யானைகளும் உயிரிழந்துள்ளன. கிணறுகள் மற்றும் பிற விபத்துகள் காரணமாக 15 யானைகள் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்ட முதலாவது தேசிய யானை கணக்கெடுப் பின்படி, காட்டு யானைகளின் எண்ணிக்கை 5,879 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் 2012 முதல் 2022 வரையான காலப்பகுதியில் குறைந்தபட்சம் 3,291 யானைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த உயிரிழப்புகளில் எழுபது வீதமானவை மனித நடத்தைகள் காரணமாக இடம்பெற்றவை என தெரிவிக்கப்படுகிறது. மக்களின் செயல்பாடுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 439 யானைகள் உயிரிழந்துள்ளன.

சட்டவிரோதமாக காடுகள் அழிக்கப்படுவதன் காரணமாக யானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் நிலை அதிகரித்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இலங்கையின் 62 வீத நிலப் பரப்பில் யானைகள் காணப்படுகின்ற போதிலும் 18 வீதம் மாத்திரமே உத்தியோக பூர்வமாக காணப்படுகின்றன. எஞ்சிய 44 வீதமான வனப்பகுதியை மனிதர்களும் யானைகளும் பகிந்துகொள்வதாக அமைகின்றது.

ஆகவே, ஒட்டுமொத்த யானைகளையும் வெறும் 18 வீத நிலப்பரப்பில் அடக்கிவிட முடியாது. இந்த நிலையிலே, யானை மற்றும் மனித மோதல் அதிகரித்து வருகின்றது. (அ)

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பில் மக்களிடம் ஆலோசனை

## குறுஞ்செய்தி மூலம் அறிவிக்குமாறு வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 24

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து பொது மக்களின் ஆலோசனைகளை பெறுவதற்கு சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் OSB YES எனவும் இல்லை எனில் OSB NO எனவும் பதிவிட்டு 0767 001 001 எனும் இலக்கத்திற்கு குறுஞ்செய்தி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொல்லப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமானது நேரடி ஜனநாயக முயற்சியின் ஒரு பகுதியாக எனவும், நாட்டு மக்கள் அரசாங்கத்தின் கொள்கைகளில் நேரடியாக வாக்களிப்பதற்கு அனுமதிக்கும் எனவும் நம்பப்படுகிறது.

இதனிடையே, எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தவும், ஊழலுக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கும் ஊடகவியலாளர்களை ஒடுக்கவும், தகவல் தொழில்நுட்பத் துறையை பாதிக்கவும் நிகழ் நிலை பாதுகாப்பு சட்டமூலம் பயன்படுத்தப்படலாம் என சிரேஷ்ட தகவல் தொழில் நுட்ப வல்லுநர்கள் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சட்டங்கள் ஏற்கனவே இலங்கையில் உள்ள நிலையில், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் தேவையில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# இந்த வருடத்தில் 3 டெங்கு மரணங்கள்!

கொழும்பு, ஜன. 24

இந்த வருடத்தின் முதல் 20 நாட்களில் 03 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 7,507 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளன.

இதன்படி , யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,602 பேரும் , கொழும்பு மாவட்டத்தில் 1,536 பேரும் , கம்பஹா மாவட்டத்தில் 637 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை என சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் நோக்கத்தை அரசு பகிரங்கப்படுத்தவேண்டும்!

## உதய கம்மன்பில கோரிக்கை

கொழும்பு, ஜன. 24

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பதவி காலம் மூன்றரை வருடங்களை கூட அண்மிக்காத நிலையில் ஐந்தாவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படவுள்ளமை வேடிக்கையானது. பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைத்து,புதிய கூட்டத்தொடரை ஆரம்பிப்பதன் உண்மை நோக்கத்தை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைத்து, புதிய கூட்டத்தொடரை ஆரம்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பின் 70(3) சரத்துக்கு அமைய வழங்கப்பட்டுள்ளது.

அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதால் ஜனாதிபதி விரும்பிய நேரத்தில் பாராளுமன்றத்தை ஒத்திவைத்து, புதிய கூட்டத்தொடரை ஆரம்பிப்பது முறையற்றது.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரை நாளைய பாராளுமன்ற அமர்வுடன் ஒத்திவைத்து ஐந்தாவது கூட்டத்தொடரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி உத்தேசித்துள்ளதாக அறியு முடிகிறது.

இந்த பாராளுமன்றத்தின் பதவிக்காலம் மூன்றரை வருடங்களை கூட நிறைவு செய்யாத நிலையில் ஐந்தாவது கூட்டத்தொடரை ஆரம்பிப்பது என்பது வேடிக்கையானது.

பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைப்பது என்பது அத்தியாவசியமான தொன்றல்ல, 1977 ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஐந்து கூட்டத் தொடர்களை கொண்டதாகவே பாராளுமன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைப்பதால் கோப்,கோபா மற்றும் அரசாங்க நிதி தொடர்பான குழு உட்பட அமைச்சுசார் ஆலோசனை குழுக்கள் இயல்பாகவே கலைக்கப்படும்.

மீண்டும் புதிய குழு மற்றும் அதற்கான உறுப்பினர் நியமனத்தில் ஆளும் மற்றும் எதிர் தரப்புக்கு இடையில் பாரிய போட்டி நிலவும்.அத்துடன் அதுவரை காலமும் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணைகளும் இரத்து செய்யப்படும்.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரையாடுவார், அதன் பின்னர் விசேட விருந்துபசாரம் இடம்பெறும்.

ஆனால் அரச நிர்வாகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. அரச நிதியும்,காலமும் மாத்திரம் வீண்விரயமாக்கப்படும்- என்றார்.

(அ)

# யானை, அணில், மயில் மற்றும் குரங்குகளால் சேனைப் பயிர்ச்செய்கைக்கு பெரும் பாதிப்பு

## அம்பாறை மாவட்ட விவசாயிகள் விசனம்

அம்பாறை, ஜன. 24

அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் அண்மைக்காலமாக காட்டு யானைகள், அணில், மயில் மற்றும் குரங்குகளின் தொல்லையால் சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் குடியிருப்பாளர்களும் பலவிதமான அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

பகலில் கிராமங்களுக்குள் உட்புகும் அணில்களும்,குரங்குகளும், மயில்களும் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள், இளம் தென்னை மரங்கள் மற்றும் பழ மரங்களுக்கு பலத்த சேதத்தை விளைவிக்கின்றன.

குரங்குகள் வீட்டின் கூரைகளுக்கு மேலாக பாய்ந்து செல்வதால் வீட்டின் ஓடுகள் சேதமடைவதுடன், சில வேளைகளில் வீட்டில் ஒருவரும் இல்லாத சந்தர்ப்பங்களில் சமைத்த உணவு மற்றும் ஏனைய உணவுப் பொருட்களை உண்பதுடன் சமையல் பாத்திரங்களையும் வெளியே எடுத்துச் சென்றும் விடுகின்றன.

வீட்டில் சிறுவர்கள் தனியாகவுள்ள வேளைகளில் இந்த குரங்குகள் வருவதால் குழந்தைகளும்,சிறுவர்களும் எந்த நேரமும் அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இரவு வேளைகளில் நீருக்காகவும் உணவுக்காகவும் கூட்டம் கூட்டமாக வரும் காட்டு யானைகள் மரங்களுக்கும் குடியிருப்புகளுக்கும் பலத்த சேதத்தை உண்டு பண்ணுவதுடன் உயிரிழப்புகளையும் ஏற்படுத்துகின்றன.

இதனால் இரவு வேளைகளில் சிறு பிள்ளை முதல் முதியவர்கள் வரை குடிபெயர்ந்து செல்ல வேண்டிய இக்கட்டான நிலமையில் இப் பிரதேச மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

உயிர்களுக்கு மிகவும் அச்சத்தை ஏற்படுத்தும் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் இரவு வேளைகளில் விடியும் வரை நித்திரையின்றி விழித்திருப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

காட்டு அணில்கள்,காட்டு யானைகள் மற்றும் குரங்குகள் போன்றவற்றை கட்டுப்படுத்த யானை வெடிகள், மின்வேலி மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கான உபகரங்களை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுள்ளனர்.

(அ)



## முதலாமிடம் பெற்ற மாணவர்களுக்கு மட்டக்களப்பு அரச அதிபர் கௌரவம்

மட்டக்களப்பு, ஜன. 24

தகவல் தொழில்நுட்ப துறையில் இணைய தளங்களை உருவாக்கும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டியொன்றை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் அண்மையில் நடத்தியது.

இரண்டு சுற்றுக்களாக நடாத்திய இப் போட்டியில் நாடு தளுவிய ரீதியில் 125 பாடசாலைகள் பங்கேற்றன.

இரண்டாம் சுற்றுக்கு கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக பெண்கள் கல்லூரி, குளியாப்பிட்டிய மத்திய கல்லூரி, ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி, ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி, மிஹிந்தலே மத்திய கல்லூரி ஆகிய தெரிவு செய்யப்பட்டிருந்தன.

தரம் 6 தொடக்கம் 9 வரையிலான மாணவர்கள் பங்கேற்ற இப்போட்டியில் ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினை பெற்றுக் கொண்டது.

வெற்றியீட்டிய மாணவர்களையும், பயிற்சி வழங்கிய ஆசிரியர்களையும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

(அ)

## யானை தாக்கி வயோதிபர் பலி



திருமலை, ஜன. 24

திருகோணமலை - கிண்ணியா, வான் எல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செம்பி மொட்டை காட்டுப்பகுதியில் யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆயிலியடி பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய எம்.எஸ்.முஹமட் யாகூப் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செம்பி மொட்டை அரசுக்கு சொந்தமான காட்டுப் பகுதியில் மரம் வெட்டிக் கொண்டிருந்த போது, யானை தாக்கியதாக தெரியவந்துள்ளது.

மேலும், தடை செய்யப்பட்ட காட்டுப் பகுதிக்குள் சென்று மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது யானை தாக்கி விழுந்து கிடந்துள்ளார். அந்த இடத்துக்கு அருகில் உள்ள வயல் உரிமையாளரான அவரது மகன், தந்தையை தூக்கிக் கொண்டு யானை மின் வேலிக்கு அருகில் வரும்போது தந்தை உயிரிழந்துவிட்டார் என பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வான்எல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## நான்கரை இலட்சம் ரூபா பணத்தை கண்டெடுத்து ஒப்படைத்தார் ஆரையம்பதி சலூன் உரிமையாளர்

மட்டக்கலப்பு, ஜன. 24

காத்தான்குடி ஆரையம்பதி எல்லையிலுள்ள சிகையலங்கார நிலையத்திற்கு கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் முடி வெட்டச் சென்ற காத்தான்குடியைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் தான் கொண்டு சென்ற பணப்பையை சிகையலங்கார நிலையத்திற்குள் தவறவிட்டு வீடு வந்து சேர்ந்துவிட்டார்.

பணத்தை தவறவிட்டவர் பல இடங்களிலும் பணத்தை தேடியும் கிடைக்காததால் சிகையலங்கார நிலைய உரிமையாளரை தொடர்பு கொண்டு விடயத்தை தெரிவித்துள்ளார்.

இரவு நேரம் என்பதால் மறுநாள் காலை சிகையலங்கார நிலையத்துக்குச் சென்ற உரிமையாளர் பணப்பையை கண்டெடுத்து உரிமையாளரிடம் கொடுத்துள்ளார்.

நான்கரை இலட்சத்து அறுபத்தி ஐயாயிரம் ரூபா பணம் அதில் இருந்துள்ளது. அப்படியே அந்த பணப்பையை சிகையலங்கார நிலைய உரிமையாளர் ஒப்படைத்துள்ளார்.

பணத்தின் சொந்தக்காரர் சன்மானம் கொடுத்தும் கூட சிகையலங்கார நிலைய உரிமையாளர் அதனை வாங்கவில்லை.

## உழவர் திருநாள் விழா 27ஆம் திகதி!




திருமலை, ஜன. 24

உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையும், திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலகமும் இணைந்து நடத்தும் உழவர் திருநாள் விழா திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் தலைவர் சுந்தரம் சிவபாலன் தலைமையில் இடம்பெறவுள்ள

உழவர் திருநாள் விழாவுக்கு முதன்மை அதிதியாக உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் சர்வ தேசத் தலைவர் எந்திரி த.மகிபாதேவனும், சிறப்பு அதிதியாக திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் வெ.இராஜசேகர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

காளி கோவில் தேவஸ்தான வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்களும், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் இமானுவல் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் ஆண்டகை ஆகியோரினால் ஆன்மீக அருளுரை நிகழ்த்தப்படவுள்ளது.

(அ)

## சைக்கிளிங் கிறீன் அமைப்பால் மரநடுகை



அம்பாறை, ஜன. 24

ஹப்பி எயிட் அமைப்பினரால் சைக்கிளோட்ட வீரர்களை உள்ளடக்கிய சைக்கிளிங் கிறீன் அமைப்பினரை வரவேற்று அவர்கள் மூலமாக பள்ளிவாசல் வளாகத்தில் மரநடுகை நிகழ்வும், சைக்கிளிங் கிறின் கழ கத்தினால் பாடசாலைகளுக்கும், அமைப்புக்களும் நூல்களும் வழங்கும் நிகழ்வுகளும் அண்மையில் நாவலடி மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த மர நடுகை நிகழ்வில் சைக்கிளிங் கிறீன் கழக அங்கத்தவர்களுடன் மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.எம்.எம். முபீன், எம்.ஐ.எம். உவைஸ் (வருமானவரி உதவி ஆணையாளர்), யூ.எல். ஜவாஹிர் (கணக்காளர்), எஸ்.எம். றம்ஸீன் (தென் கிழக்கு பல் கலைக்கழக உத்தியோகத்தர்), றிஸ்கான் சாபி (முகாமைத்துவ பணிப்பாளர், றய்னா நிறுவனம்), எம். ஜௌபி (பிரபல தொழிலதிபர்), எம்.ஐ. அறபாத் (பிரபல தொழிலதிபர்), எஸ். எம். ஹூசைன் (இ.போ.ச) , ஹெப்பி எய்ட் சார்பில் றிப்கான் றபாய்தீன், ஹரிஸ் முகம்மட், ஹஸ்மிர் றபீக் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

## அம்பாறை மாவட்ட மீனவர் மாநாடு

நிந்தவூர், ஜன. 24

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை அம்பாறை மாவட்டத்தில், மாவட்ட மீனவர் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கின்றது.

“மீன்பிடித்தொழில் அனர்த்தத்தில் தீர்விற்கான மீனவர் பலத்தைக்கட்டி யெழுப்புவோம்” எனும் தலைப்பில் மேற்படி அம்பாறை மாவட்ட மீனவர் மாநாடு இன்று மாலை 4 மணிக்கு, சாய்ந்தமருது சதுக்கத்தில் இடம்பெறவிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தலைவருமான நிஹால் கலப்பத்தி, நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே ஆகியோரின் பங்குபற்றுதலுடன் மாநாடு நடைபெறவுள்ளது.

(அ-06)

# யேமனில் ஹவுதி போராளிகளின் ஆயுத களஞ்சியம்மீது தாக்குதல்!



லண்டன், ஜன. 24

யேமனில் ஹவுதி போராளிகளுக்கு சொந்தமான நிலத்தடியில் அமைந்துள்ள ஆயுத சேமிப்புக் களஞ்சியம் உட்பட 8 இடங்களை இலக்கு வைத்து அமெரிக்க, பிரித்தானிய படையினர் நேற்று முன் தினம் மீண்டும் விமான தாக்குதல் நடத்தியுள்ளனர்.

செங்கடலில் பயணிக்கும் கப்பல்களை குறித்து வைத்து தாக்க ஹவுதி போராளிகள் பயன்படுத்தும் ஏவுகணை, கண்காணிப்புக் கட்டமைப்பையும் இலக்கு வைத்து அமெரிக்க மற்றும் பிரித்தானிய படையினர் இந்த தாக்குதல் மேற்கொண்டதாக அமெரிக்க பாதுகாப்பு ராஜாங்க செயலகம் தெரிவித்துள்ளது.

காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திவரும் நிலையில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக தாம் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக யேமனில் மக்கள் தொகை அதிகமுள்ள பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹவுதி போராளிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா, பஹ்ரேன், கனடா, நெதர்லாந்து ஆகிய வற்றுடன் செய்துகொண்ட கூட்டு ஒப்பந்தத்தை அடுத்து அமெரிக்க, பிரித்தானிய படையினர் 8 முறை தாக்குதல்கள் நடத்தியுள்ளதாக ஆறு நாடுகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச வர்த்தகத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள ஹவுதி போராளிகளின் பலத்தை தகர்த்து அழிக்கவே இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

ஹவுதி போராளிகள் சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு தடையாக இருந்து வருவதாகவும் இதன் காரணமாக சர்வதேச ரீதியில் பணவீக்கம் ஏற்படும் ஆபத்து எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)



# அமெரிக்க பனிப்புயலினால் 90இற்கும் மேற்பட்டோர் பலி!

நியூயோர்க், ஜன. 24

அமெரிக்கா முழுவதும் கடந்த ஒருவாரமாக தொடரும் கடும் பனிப்புயல் காரணமாக 90இற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


டென்னசியில் 25 பேரும், ஓரிகானில் 16 பேரும் அதிகளவில் உயிரிழந்துள்ளனர்.

கடும் பனிப்புயலால் குறித்த பகுதிகளில் தொடர்ந்தும் அவசரகால நிலையில் உள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்லாயிரக் கணக்கானோர் மின்சாரம் இல்லாமல் உள்ளனர்.

அடுத்த சில நாட்களில் பனி மூட்டம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஒரு வாரத்தில் அமெரிக்க முழுவதும் கடும் பனிப்புயலால் குறைந்தது 92 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகப்பூர்வ தகவல்களை அடிப்படையாக கொண்டு பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது. (அ)




## சிக்காகோவில் பதற்றம்!

# எட்டுப் பேரை கொன்ற நபர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை

நியூயோர்க், ஜன. 24

சிக்காகோவின் புறநகர் பகுதியில் 8 பேரைக் சுட்டுக் கொன்ற சந்தேக நபர் டெக்சாஸில் தற்கொலை செய்து கொண்டதாக அமெரிக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டெக்சாஸில் சட்ட அமுலாக்க அதிகாரிகளுடனான மோதலுக்கு பின்னர் குறித்த நபர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக திங்கட்கிழமை பிற்பகுதியில் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

23 வயதான ரோமியோ நான்ஸ் என்ற நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.

சிகாகோ புறநகர்ப் பகுதிகளில் மூன்று இடங்களில் எட்டு பேரை நான்ஸ் சுட்டுக் கொன்றுள்ளதாக கூறப்படுகிறது.

எனினும், அவரது இந்த நோக்கத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நடுவானில் விமான கதவை திறக்க முயற்சித்த பயணி!

## கனடா நோக்கி சென்ற விமானத்தில் நடந்த சம்பவம்

லண்டன், ஜன. 24

இங்கிலாந்தில் இருந்து நேற்று முன்தினம் கனடா நோக்கி சென்ற விமானம் வானில் பறந்து கொண்டிருந்த போது அதன் அவசரகால வெளி யேற்ற கதவைத் திறக்க முயற்சித்த பயணியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் லண்டனில் இருந்து நேற்று முன் தினம் பிற்பகல் கனடாவின் ரொறன்ரோ நகருக்குக் புறப்பட்டுச் சென்ற ஏயார் கனடா விமானத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

அந்த விமானத்தில் பயணம் செய்த வயதான பயணி ஒருவரின் நடவடிக்கைகள் வித்தியாசமாக இருந்ததாக அதில் பயணித்த மற்றுமொரு பயணி தெரிவித்துள்ளார்.

நடுவானில் விமானம் பறந்து கொண்டிருந்த போது வயதான அந்த பயணி விமானத்தின் கதவைத் திறக்க முற்பட்டுள்ளார்.

எனினும் டொரோன்டோ




விமான நிலை யத்தில் விமானம் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் இருந்த ஏனைய பயணிகள் அனைவரும் இறங்கிய பின்னர், பொலிஸ் அதிகாரிகள் விமானத்திற்குள் சென்று சம்பந்தப்பட்ட பயணியிடம் விசாரணைகளை நடத்தினர்.

அந்த பயணி ஏதோ ஒரு நெருக்கடியிலும் மனக்குழப்பத்திலும் இருந்ததாகவும் வேண்டுமென்றே அவர் விமானத்தின் கதவைத் திறக்க முயற்சிக்கவில்லை எனவும் விசாரணையில் தெரியவந்தாக ரொறன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால், வயதான அந்த பயணிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

# 1985 முதல் தென்கொரியாவில் தொடரும் குழந்தை விற்பனை

சியோல், ஜன. 24

தென்கொரியாவில் பிறப்பு விகிதம் குறைவாக இருந்தாலும் தத்தெடுப்பதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் குழந்தைகளின் எண் ணிக்கை குறையவில்லை. அப்படி தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளில் ஒன்று யூன்-ஹிவா.

1974ஆம் ஆண்டில் தென்கொரியாவில் யூன்-ஹிவாவாக பிறந்த அவர், நெதர்லாந்தில் ஒரு வயதாகும்போது பெட்ரா ஸ்வார்ட் என அழைக்கப்பட்டார். டச்சு குடும்பத்தினர் அவரையும் அவரது ஐந்து வயது சகோதரரையும் அன்பாக வரவேற்று ஆர்வமாக தத்தெடுத்துக் கொண்டனர். நெதர்லாந்தில் இருந்தாலும் அவரது தோற்றத்தை மாற்ற முடியவில்லை. கிழக்கு ஆசியரைப் போன்று இருந்ததால் ஒரு குழந்தையாக வளர்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

1953ஆம் ஆண்டிலிருந்து வெளிநாடுகளில் ஏறக்குறைய 170,000 தென்கொரிய குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டன. இதற்கு உள்நாட்டிலேயே பலத்த எதிர்ப்பு இருந்தாலும் வெளிநாட்டுத் தத்தெடுப்பு சம்பவங்கள் குறையவில்லை.

2022ஆம் ஆண்டில் சுமார் 142 கொரிய குழந்தைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இந்த நிலையில் இன்னமும் ஏன் தத்தெடுப்பு சம்பவங்கள் நடக்கின்றன என்று ஸ்வார்ட் கேள்வி எழுப்பியுள்ளார்.

"தென்கொரியா தற்போது செழிப்பான நாடாகிவிட்டது. வேறு இன தத்தெடுப்பு சம்பவங்களின் விளைவுகளை அறிந்துள்ளோம். குழந்தையின் நலனுக்காக தத்தெடுக்கப்படுவது இல்லை. வேறு அணுகுமுறை ஏதாவது இருக்கிறதா," என்று அவர் கேட்டுள்ளார்.

2021இல் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பிற்காக குழந்தைகளை அனுப்பிய நாடுகளில் தென்கொரியா ஐந்தாவது இடத்தில் இருந்ததாக ஆய்வு ஒன்று தெரிவித்தது.

தென்கொரிய வரலாற்றைப் பார்த்தால் 1953ஆம் ஆண்டிலிருந்தே குழந்தைகள் தத்தெடுப்பிற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அப்போதைய கொரிய போரில் ஏராளமான குழந்தைகள் வீடுகளையும் பெற்றோரையும் இழந்து அனாதைகளாகினர்.

போர் சூழல் அல்லது இயற்கைப் பேரிடர் காரணமாக குறுகிய காலத்தில் அதிக குழந்தைகள் தத்தெடுக்கப்படுவது வழக்கத்திற்கு மாறானது அல்ல. ஆனால் தற்போது தென்கொரிய நிலைத்தன்மையோடு இருந்தாலும் வெளி நாட்டு தத்தெடுப்பு குறையவில்லை. (அ)

# பொலிஸாரின் நடவடிக்கைகளினால் உயிரிழப்போர் எண்ணிக்கை உயர்வு

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை

கொழும்பு, ஜன. 24

**பொலிஸாரின் நடவடிக்கைகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.**

அரசாங்கம் இந்த விடயம் குறித்து சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிலநாட்களிற்கு முன்னர் நாரம் மலவில் இடம்பெற்ற சம்பவத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச்செயல்களுக்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் விதம் குறித்து விமர்சனங்கள் வெளியாகியுள்ள போதிலும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அதனை தொடர்வதில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிராக அவசியமான சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இவற்றை உரிய சட்ட நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

(அ)



# நீர்வேலி விபத்தில் இளைஞன் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜன. 24

நீர்வேலி மாசிவன் சந்தியில் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மாசிவன் சந்தியால் மோட்டார் சைக்கிளில் இளைஞர் செல்லும் போது குறுக்கே வந்த ஹைஏஸ் வான் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## சிறீதரனுக்கு ஜனாதிபதி வாழ்த்து

கொழும்பு, ஜன. 24

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரனுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அணிசேரா மாநாட்டுக்காக உகண்டாவின் தலைநகர் கம்பாலாவில் தங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க சிறீதரனுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (அ)

# பெலியத்தை படுகொலைச் சம்பவம் விசாரணைக்கு 6 பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, ஜன. 24

மாத்தறை - பெலியத்தை பிரதேசத்தில் ஐந்து பேர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக 06 விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ இன்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

தென் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

பெலியத்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அபே ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேரா உள் ளிட்ட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

வெள்ளை நிற டிபென்டர் ரக வாகனத்தில் பயணித்த 5 பேரை இலக்கு வைத்து பச்சை நிற கெப் வண்டியில் வந்த சிலர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சகோதரனை கத்திரிகோலால் குத்தி கொலை செய்தார் மூத்த சகோதரன்!

கொழும்பு, ஜன. 24

பொரளை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சகோதரர்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் தனது சகோதரனை கத்திரிகோலால் குத்தி கொலை செய்த மூத்த சகோதரன் பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கொழும்பு 8 , பொரளை, சர்பன்டைன் வீதியை சேர்ந்த 55 வயதுடைய ஐ. எச் . ஜயந்த என்ற நபராவார். சந்தேக நபர் மது போதையில் இருக்கும் பாது சகோதரருடன் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தகராறின் போது மூத்த சகோதரன் இளைய சகோதரனின் மார்பின் இடது பக்கத்தில் கத்திரிக் கோலால் குத்தி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது

யாழ்ப்பாணம், ஜன. 24

கோப்பாயில் மரக்காலையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

இந்த சுற்றிவளைப்பின் போது நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் 10 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பொலிஸார் போன்று தொலைபேசி மூலம் உரையாடி பண மோசடியில் ஈடுபடும் குழு!

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 24

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பல வீடுகளிலுள்ள தொலைபேசிகளுக்கு அழைப்பெடுத்து, தம்மை பொலிஸார் எனக் கூறி, ஏமாற்றி பணம் பறிக்க முற்படும் கும்பலொன்று தலைமறைவில் இயங்கி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, முல்லேரியா, நவகமுவ பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு இதுபோன்ற அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும், பொலிஸார் எனக் கூறி பணம் பறிக்க அழைப்பு விடுக்கப்படுவது தொடர்பில் பொலிஸ் நிலையங்களுக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ கூறினார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன்

## கூறுகிறார் திலித் ஜயவீர

கொழும்பு, ஜன. 24

எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால், அதில் நிச்சயமாக போட்டியிடுவேன் என மவ்பிம ஜனதா கட்சியின் தலைவரும், தொழிலதிபருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மவ்பிம ஜனதா கட்சியின் அபிலாஷை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை மாத்திரம் இலக்காகக் கொண்ட வேலைத் திட்டம் அல்ல. இந்தக் கட்சி இலங்கையின் வரலாற்றுத் தேவைக்காகப் பிறந்த ஒரு சக்தியாகும்.

இந்தக் கட்சி மிகவும் தத்துவார்த்தமானதும் தர்க்க ரீதியானதுமான வேலைத்திட்டமும் பொருத்தமான அணியும் கொண்டது. குறிப்பாக இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்கள் அடங்கிய ஒரு ஐக்கிய அமைப்பு. எங்களிடம் மிகப் பெரிய நீண்ட இலக்கு உள்ளது.



இந்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யார் என்று கேட்டால், குறுகிய அரசியல் கோணத்தில் இன்னமும் கேட்கப்படும் கேள்வியாகவே நான் கருதுகிறேன். அது தேவை என்றால், நான் அதற்குத் தயாராக இருக்கிறேன் என்று நேர்மையாகச் சொல்ல முடியும்.

ஆனால் இது திலித் ஜயவீரவின் ஜனாதிபதி பதவிக்கான தனிப்பட்ட கனவில் இருந்து உருவாக்கப்பட்ட குறுகிய கால வேலைத்திட்டம் அல்ல. நிச்சயமாக ஜனாதிபதி தேர்தல் நடந்தால் அந்த தேர்தலில் போட்டியிடுவோம். அதில் வெற்றிப் பெறுவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்வோம் - என்றார். (அ)

# வருடாந்த இடமாற்றம் கடுமையான தீர்மானம்

கொழும்பு, ஜன. 24

வருடாந்த இடமாற்றங்களின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கான இடமாற்றங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அனைத்து அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களிடம் பொதுச் சேவை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகள் தொடர்பில், ஆணைக்குழுவின் தீர்மானங்கள் இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், பல்வேறு தரப்பினரிடமிருந்து தொடர்ந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதாக என அரச சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக, முன்னுரிமை இடமாற்றத்தின் கீழ் வழங்கப்பட்ட சில இடமாற்ற சுழற்சிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், அதனால் சம்பந்தப்பட்ட இடமாற்ற சுழற்சிகளில் உள்ள ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பாதகமான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அரச சேவைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

வருடாந்த இடமாற்றம் தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களில் அதிருப்தி அடையும் அதிகாரிகள் தமது மேல்முறையீட்டு மனுக்களை நிர்வாக மேன்முறையீட்டு தீர்ப்பாயத்தில் சமர்ப்பிக்கலாம் என பொதுச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆனால், அந்த மேன்முறையீட்டு மனுக்கள் தொடர்பான நிர்வாக மேன்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முடிவுகள் நிலுவையில் உள்ளதால், உரிய இடமாற்றங்கள் அப்படியே தொடர வேண்டும் என்று பொதுச்சேவை ஆணைக்குழு, அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளது.

இதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற உத்தரவுகள் தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவிடம் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்க வேண்டாம் எனவும், முறைப்படி இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளை விடுவிக்குமாறும் அரச சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

## தமிழக மீனவர்கள் 6 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 24

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 6 பேர் நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த மீனவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களை கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## இம்முறை கச்சதீவு உற்சவ உணவு வழங்கலில் மாற்றம்!

யாழ்ப்பாணம், ஜன. 24

இம்முறை கச்சதீவு அந்தோனியார் உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கான உணவு வழங்கலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்

நேற்று இடம்பெற்ற முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தில் 8000 பக்தர்கள் பங்கேற்கவுள்ள நிலையில் பங்கேற்கும் பக்தர்களுக்கு நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் இம்முறை சைவ உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் 23 ஆம் திகதி இரவு உணவாக குழைசாதமும் 24ஆம் திகதி காலை உணவாக சர்க்கரைப் பொங்கலும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஆயர் இல்லம், மாவட்ட செயலகம் கடற்படையினரால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இவ்வருட உற்சவத்தை செலவுகளை குறைத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் ஆலய வளாகத்தில் சமைப்பதற்கு யாருக்கும் அனுமதி வழங்கப்படாது. எனவே இந்த விடயத்தினை ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் கருத்தில் எடுக்க வேண்டும் - என்றார். (அ)

## இந்திய தூதுவர் - மைத்திரி கொழும்பில் திடீர் சந்திப்பு



கொழும்பு, ஜன. 24

இலங்கைக்கான புதிய இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இச் நதிப்பானது, முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில், புதிய தூதுவருக்கு மைத்திரிபால சிறிசேன தமது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இலங்கை இக்கட்டான சூழலை எதிர்கொண்டுள்ள இவ்வேளையில் இந்தியாவின் ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதாகவும், இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிப்பதற்கு நன்றி தெரிவிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமையை மேம்படுத்துவதற்கு இந்தியா அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும், இலங்கைக்கு தேவையான ஆதரவை தொடர்ந்து வழங்க இந்தியா தயாராக இருப்பதாகவும் தூதுவர் இதன்போது கூறினார். (அ)

# தனுஷ்கோடி - தலைமன்னார் இணைப்பதற்கு கடல் பாலம்?

### சாத்தியக்கூறு ஆய்வை நடத்த இந்திய அரசு தீர்மானம்

புதுடில்லி, ஜன. 24

இந்தியாவின் தனுஷ்கோடியையும் இலங்கையின் தலைமன்னாரையும் இணைக்கும் விதமாக கடல் பாலமொன்றை நிர்மாணிப்பதற்காக இந்திய மத்திய அரசு சாத்தியக் கூறு ஆய்வினை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாட்டுக்கு 3 நாட்கள் விஜயம் மேற்கொண்டிருந்தபோது இராமர் பாலம் இருந்ததாக கூறப்படும் அரிச்சல்முனையை பார்வையிட்டதுடன், கோதண்டராமர் கோவிலில் சிறப்பு பூசையிலும் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே தற்போது இந்த திட்டம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வங்காளவிரிகுடாவின் குறுக்கே இந்தியாவில் உள்ள தனுஷ்கோடி, இலங்கையை இணைக்கும் 23 கிலோமீற்றர் கடல் பாலத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வினை இந்திய மத்திய அரசு நடத்தவுள்ளது.

இந்த திட்டம் நிறைவேறினால், இருநாடுகளுக்கு இடையேயான இருதரப்பு வர்த்தகத்திற்கும் குறிப்பாக தமிழகத்துக்கு பெரும் ஊக்கமாக அமையும் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பு ரீதியாக இந்தியா - இலங்கை இடையிலான உறவை புதுப்பிக்கவும் சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தை எதிர்க்கவும் இந்த திட்டம் உதவியாக இருக்கும் என இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை எதிர்த்து பாராளுமன்ற பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 24

உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாராளுமன்றப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு சபையில் எடுத்துக்கொள்ள வேண்டாமென எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது மக்களின் பேச்சு சுதந்திரத்தை ஒடுக்குவதாக தெரிவித்து சமூக ஆர்வலர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)



# இந்தியாவிலிருந்து வரும் பக்தர்களை உரிய முறையில் அனுசரிக்க பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்துக்கு இந்தியாவிலிருந்து வருகை தரும் பக்தர்களை சரியான முறையில் அனுசரிக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நேற்று இடம்பெற்ற முன்னேற்பாட்டு கூட்டத்தில் மேற்படி அறிவுறுத்தலை அரச அதிபர் வழங்கினார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்-

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்துக்கு இம்முறை இந்தியாவிலிருந்து 4000 பக்தர்கள் வருகை தர உள்ளனர். அவ்வாறு வருகை தருவோரை நாங்கள் எமது அயல்நாடான இந்தியாவில் இருந்து வருகை தருவோர் என கருதி அதாவது வெளிநாட்டிலிருந்து வருவோர் என கருதி சரியான முறையில் அனுசரிக்க வேண்டும். அவர்களை வெயிலில் நிற்க வைக்காது உரிய முறையில் பரி சோதித்து ஆலயத்திற்கு செல்ல அனுமதிக்கவேண்டும்.

குறிப்பாக அதிகளவு பரிசோதனை அதிகாரிகளை அந்த இடங்களில் நிறுத்தி உரிய பரிசோதனைகளை வேகமாக செயற்படுத்தி அவர்களுக்கு இடையூறு அற்ற வகையில் செயற்படவேண்டும்-என்றார். (அ)

# சமன் பெரேராவின் கொலையுடன் கொஸ்கொடை சுஜீவவுக்கு தொடர்பு

கொழும்பு, ஜன. 24

பெலியத்தையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட எமது மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சமன் பெரேரா உட்பட 5 பேரின் கொலைகளுடன் கொஸ்கொடை சுஜீவவின் பாதாள உலகக் குழுவினருக்கு தொடர்பு இருப்பது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தங்காலை குடாவெல்லையில் நடந்த மூன்று பேரின் கொலைக்கு பழிவாங்கும் நோக்கில் கொஸ்கொடை சுஜீவ தலைமையிலான பாதாள உலகக்குழு இந்த கொலைகளை திட்டமிட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ரோயல் பீச் சமன் பெரேரா, தற்போது வெளிநாட்டில் பதுங்கி இருக்கும் கொஸ்கொடை சுஜீவவின் பிரதான எதிரி எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக தென் மாகாண விசேட குற்றவியல் விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், பெலியத்த - கஹவத்த நுழைவு வாயிலுக்கு அருகில் நேற்று முன் தினம் காலை 8 மணியளவில் இந்த சம்பவம் நடந்தது.

ரோயல் பீச் சமன் என அழைக்கப்படும் சமன் பெரேரா உள்ளிட்டோர் தங்காலை நீதிமன்றத்தில் முன்னிலையாவதற்காக சென்று கொண்டிருந்த போது இந்த கொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன.

பிராடோ வாகனத்தில் சென்ற சிலர், டிப்பெண்டர் ஜீப் வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த சமன் பெரேரா உள்ளிட்டோர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டை நடத்துவதற்காக சென்ற பிராடோ வாகனம் இமதுவ வழியாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசித்துள்ளது.

இந்த சம்பவத்தில் சமன் பெரேரா உட்பட நான்கு பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர். மற்றுமொரு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

தென் மாகாணத்தில் பாதாள உலகக்குழுக்களுடன் சம்பந்தப்பட்ட பல கொலை தொடர்பில் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கிய சமன் பெரேரா, பிரதேசத்தில் பாதாள உலகக்குழு ஒன்றின் சர்ச்சைக்குரிய நபர். அத்துடன் இந்துருவ ரோயல் பீச் ஹோட்டலின் உரிமையாளர். இவர் கடந்த 2022 ஆம் ஆண்டு குடாவெல்ல பிரதேசத்தில் நடந்த கொலையுடன் தொடர்புடைய நபருக்கு உதவிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்.

பலப்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஸ்ரான்லி தாப்ரூ, அவரது மகன் டெரி தாப்ரூ ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம்,இந்துருவ சமன் என்பவரின் கொலையுடன் சமன் பெரேராவுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அயோத்தி கோவிலில் ராமர் சிலையை பிரதிஷ்டை செய்தார் பிரதமர் மோடி!

இந்தியா முழுவதும் கடந்த சில வாரங்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்த அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழா ஜன. 22 அன்று கோலாகலமாக நடைபெற்றது.

மதியம் 12.30 மணி அளவில் இந்நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டு கோவிலில் வைக்கப் பட்டிருந்த 'ராம் லல்லா' எனப்படும் பாலராமர் சிலைக்கு பிரதிஷ்டை செய் தார். சிறப்பு வழிபாட்டுக்குப் பின்னர் அச்சிலையின் கண்களை மூடியிருந்த மஞ்சள் துணி அகற்றப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது. கடந்த 18ஆம் திகதி மதியமே, 1.28 மணியளவில், 51 அங்குல ராமர் சிலை கோவிலின் கருவறையில் வைக்கப்பட்டது.



முன்னதாக, அயோத்தி ராமர் கோவி லுக்கு பூஜை பொருட்கள், பட்டு வஸ்தி ரங்களுடன் வந்த பிரதமர் மோடி, அங்கு சிறப்பு வழிபாட்டில் கலந்துகொண்டார். இந்த வழிபாட்டில் மோடிக்கு அருகே ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத், உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், அம்மாநில ஆளுநர் ஆனந்தி பென் படேல் உள்ளிட்டோர் அமர்ந்திருந்தனர்.

மேலும், இவர்கள் தவிர நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 15 பேரும் கலந்துகொண்டனர்.

பாலராமரின் கண்கள் திறந்து வைக்கப்பட்ட பின்னர் அயோத்தி ராமர் கோவிலை சுற்றி ஹெலிகாப்டர் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

நாடு முழுவதிலும் இருந்து தேர்வு செய்யப்பட்டு, அயோத்திக்கு வரவழைக் கப்பட்டுள்ள இசைக்கலைஞர்கள் இந்நிகழ்வை முன்னிட்டு இசைக்கருவி களை வாசித்தனர்.

23 ஆம் தேதிக்கு பின், அயோத்தியில் உள்ள ராமரை அனைவரும் தரிசிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

இந்நிகழ்வுக்காக அயோத்தி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. நாட்டின் பல்வேறு மூலைகளிலிருந்தும் பல்வேறு துறை பிரபலங்கள் அயோத்தி ராமர் கோவிலுக்கு வந்துள்ளனர்.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மிகப் பிரம்மாண்டமாக செய்யப்பட்டுள்ளது.


இந்நிகழ்வை முன்னிட்டு இந்தியா வின் பல்வேறு பகுதிகளில் உள்ள கோவில்களில் மத சடங்குகள், யாகங் கள், ஹோமங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

**யாரெல்லாம் கலந்து கொண்டனர்?**

அயோத்தி ராமர் கோவிலுக்கு இந் தியா முழுவதிலும் இருந்து தலைவர்கள், திரை பிரபலங்கள், விளையாட்டு வீரர்கள், தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டிலி ருந்து நடிகர் ரஜினிகாந்த் தன் மனைவி லதாவுடன் கலந்துகொண்டார். ஞாயிற் றுக்கிழமை புறப்பட்டு அவர் அயோத்தி சென்றடைந்தார். அதேபோன்று, நடிகர் தனுஷூம் இந்நிகழ்வில் பங்கேற்றார்.

மேலும், நடிகர்கள் ரஜினிகாந்த், தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி, ராம்சரண், பாலிவுட் நடிகர்கள் அமிதாப் பச்சன், அபிஷேக் பச்சன், ரன்பீர் கபூர், ஆலியா பட், கங்கனா ரனாவத், விக்கி கௌஷல், கத்ரீனா கைஃப், தொழிலதிபர்கள் அனில் அம்பானி, முகேஷ் அம்பானி மற்றும் அவருடைய குடும்பத்தினர், கிரிக்கெட் வீரர் அனில் கும்ப்ளே, யோகா குரு பாபா ராம்தேவ் உள்ளிட்ட ஏராளமான பிரபலங்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





மதச்சார்பற்ற ஜனதா தள தலைவரும் முன்னாள் பிரதமருமான ஹெச்.டி. தேவ கவுடாவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

மத்திய அமைச்சர்கள் பலரும் பல் வேறு பகுதிகளிலிருந்து கோவில்கள், பொது இடங்களில் நிகழ்வை நேரலை யாக ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளில் கலந் துகொண்டனர்.

**பாதுகாப்பு ஏற்பாடுகள்**

இந்த விழாவை முன்னிட்டு அயோத்தியில் தீவிர பாதுகாப்புப் பணிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மக்கள் அதிகளவில் வருவார்கள் என்பதால், பாதுகாப்புப் பணிக்காக ஏராளமான பொலீசார் குவிக்கப்பட்டி ருந்தனர்.

10,000 சிசிடிவி கமராக்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்துடன் கூடிய ட்ரோன்கள் ஆகியவை கண்காணிப்புப் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கோவிலை சுற்றி முக்கியமான இடங்களில் முள்கம்பி தடுப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அதிகளவிலான துறவிகள் மற்றும் விருந்தினர்கள் அயோத்திக்கு வந்தடைந் துள்ளனர். அவர்கள் தங்குவதற்காக தீர்த்த க்ஷேத்ர புரம் என்ற பெயரில் தற்காலிக நகரம் ஒன்றை அமைத்து கொடுத்துள்ளது ராம ஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை.

இந்த தீர்த்த க்ஷேத்ர புரத்திற்கு விஷ்வ இந்து பரிஷத்தின் இணை செயலாளர் கோடீஸ்வர ஷர்மா பொறுப் பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, அவர் கூறுகையில், "அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே இந்த நிகழ்வில் பங்குபெற அனுமதிக்கப்படு வார்கள். இன்னமும் கோவில் கட்டு மானம் முழுமையடையாததால், இங்கு இருக்கும் இடத்திற்கு ஏற்ப 8000 விருந்தினர்கள் மட்டுமே இந்நிகழ்விற்கு அழைக்கப்பட்டுள்னர்.

அதில் 4000 துறவிகளும் அடங்குவர். கோவில் கட்டுமானத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்களோடு சேர்த்து, நாடு முழுவதும் பல்வேறு துறைகளை சேர்ந்த பிரபலங்களும் இந்நிகழ்வில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர்.

துறவிகள் மற்றும் அவர்களோடு வருபவர்களுக்கென்று கூடார நகரம் என்ற பெயரில் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது" என்றார்.

23 ஆம் திகதிக்குப் பிறகு அதிகள வில் மக்கள் வரத்தொடங்குவார்கள் என்பதால், அயோத்தியில் உள்ள இரண்டு மருத்துவமனைகளை 120 படுக் கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையா கவும், 350 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையாகவும் தரம் உயர்த் தப்பட்டுள்ளன.

அதேபோல, அயோத்திக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக, உத்தரப்பிர தேசத்தில் உள்ள ஆறு மாவட்டங்களில் இருந்து அயோத்திக்கு ஹெலிகாப்டர் சேவை தொடங்க உள்ளதாகவும் உத்தரப் பிரதேச மாநில சுற்றுலாத்துறை முதன்மை செயலாளர் முகேஷ் மெஷ் ராம் பிடிஐ செய்தி முகமையிடம் தெரிவித்துள்ளார்.

அயோத்தி பகுதியில் மக்களுக்குத் தேவையான சுகாதார கட்டமைப்பையும் வலுப்படுத்தவுள்ளதாக மத்திய அரசு கூறியிருந்தது.

**தமிழ்நாட்டில் என்ன நிலை?**

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இந்நிகழ்வை நேரலை செய்ய தடை விதித்து வாய்மொழி உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதிய மைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை உள்ளிட் டோர் குற்றச்சாட்டு எழுப்பினர்.

இதுதொடர்பாக, உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கின் விசாரணை நேற்று காலை நடைபெற்றது. அப்போது, இந்நிகழ்வை நேரலையாக ஒளிபரப் பவோ, பூஜைகள், அர்ச்சனைகள், பஜ னைகள் மேற்கொள்ளவோ, அன்ன தானம் வழங்கவோ எவ்வித கட்டுப் பாடுகளும் தடையும் இல்லை எனவும் இந்த மனுக்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்றும் தமிழ்நாடு அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

சம்பந்தப்பட்ட இடங்களில் வேறு பல சமூகத்தினர் வசிப்பதாகக் கூறி அனு மதி மறுக்கக்கூடாது என உச்ச நீதிமன் றம் தமிழ்நாடு அரசுக்கு தெரிவித்துள்ள தாக ஏ.என்.ஐ. செய்தி முகமை தெரிவிக் கிறது.

அதேபோன்று, தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களில் ராமர் கோவில் திறப்பு விழாவை நேரடி ஒளிபரப்பு செய்ய தடை விதித்த வாய்மொழி உத்தரவை யாரும் கடைபிடிக்க வேண்டியதில்லை என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக, பிடிஐ செய்தி முகமை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தமிழ்நாடு அரசுக்கு நோட்டீஸ் அனுப்பவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவிலில் இந்நிகழ்வை நேரலையாக ஒளிபரப்புவதற்கு எல்.இ.டி திரைகள் மீண்டும் பொருத்தப்பட்டு நேரலையாக ராமர் கோவில் நிகழ்வு ஒளிபரப்பப்பட்டது. மத்திய நிதியமைச் சர் நிர்மலா சீதாராமன் அந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

முன்னதாக, காமாட்சி அம்மன் கோவிலில் மிக பிரமாண்டமாக அமைக்கப்பட்ட எல்.இ.டி திரையை 'அனுமதி பெறாமல் வைக்கப்பட்டது' என கூறி அதை காவல்துறையினர் அகற்றியிருந்தனர். இதனை நிர்மலா சீதாராமன் கண்டித்திருந்தார்.






# சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தை நாடிநிற்கும் அரசாங்கம்



கலாநிதி
ஜெகான் பெரேரா



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை அதன் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட முறையில் மீண்டும் முக்கியத்துவத்தைப் பெறத் தொடங்கியிருக்கிறது போன்று தெரிகிறது.

ஆபிரிக்க நாடான உகண்டாவின் தலை நகர் கம்பாலாவில் தற்போது நடைபெறும் அணிசேரா நாடுகளின் 19 வது உச்சிமாநாட்டிலும் 77 நாடுகள் குழு மற்றும் சீனாவின் மூன்றாவது தெற்கு உச்சிமகாநாட்டிலும் ஜனாதிபதிக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடம் கிடைத்தது. உகண்டா ஜனாதிபதி ஜோவெரி முசவெனியின் அழைப்பின் பேரில் விக்கிரமசிங்க முக்கியமான சந்திப்பு களில் பங்கேற்றது மாத்திரமல்ல, அணி சேரா உச்சிமாநாட்டிலும் தெற்கு உச்சி மகா நாட்டிலும் உரையாற்றினார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கம்பாலாவுக்கான தனது விஜயத்தின்போது அவர் ஆபிரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்த தலைவலர்களுடன் இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதில் முக்கிய கவனத்தைச் செலுத்தியதுடன் தெற்கு உலக நாடுகளின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

அணிசேரா இயக்கத்தின் 120 தலைவர்களும் ஒன்றாக எடுத்த படத்தில் உச்சிமகாநாட்டை நடத்தும் உகண்டா ஜனாதிபதிக்கு பக்கத்தில் முன்வரிசையில் நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது. 1976 ஆண்டு கொழும்பில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்க அணி சேரா நாடுகளின் உச்சிமகாநாட்டை நடத்திய போதே இறுதியாக இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடம் கிடைத்தது. சர்வதேச பொருளாதார நீதிக்கு



கோராக்கை விடுத்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் நடத்திய ஒரு முக்கியமான மகாநாடாக அது அமைந்தது.

அந்த நேரத்தில் இலங்கை சர்வதேச அரங்கில் பொருளாதார கொள்கையில் உதாரணம் வகுக்கும் ஒரு நாடாக விளங்கியது. சமத்துவத்துடனான அபிவிருத்திக்கான சாத்தியப்பாட்டை வெளிக்காட்டியது. ஏனைய பல நாடுகளையும் விட உயர்ந்த ஆள்வீத வருமானத்துடன் தரம்வாய்ந்த பௌதீக வாழ்க்கைக் குறிகாட்டியில் முன்னிலையில் இலங்கை அன்று விளங்கியது.

உச்சிமகாநாட்டில் ஜனாதிபதி விக்கிரமசிங்க நிகழ்த்திய உரை முன்னுதாரணமானதாக அமைந்ததுடன் அங்கு கூடியிருந்த உலகத் தலைவர்களின் பெரும் மதிப்பையும் பெற்றது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அக்கறைக்குரிய இரு முக்கிய பிரச்சினைகளை அவர் தனதுரையில் மிகவும் துணிச்சலான முறையில் கையாண்டார்.

மத்திய கிழக்கில் காசா போர் நெருக்கடிக்கும் தெற்கு உலகம் மீதான வடக்கு உலகின் தொடர்ச்சியான ஆதிக்கத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவர் உரையாற்றினார்.

காசா பள்ளத்தாக்கின் மனிதாபி மான நெருக்கடியையும் இலங்கையில் இன மோதலைக் கையாண்டதில் தனக்கு இருக்கும் அனுபவங்களைச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட பெருவாரியான தீர்மானங்களுக்கும் இந்த அணிசேரா உச்சிமாநாட்டின் பிரகடனத்துக்கும் இசைவான முறையில் மேற்கு ஆற்றங்கரை, காசா பள்ளத்தாக்கு மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகியவை பாலஸ் தீன அரசின் எல்லைகளுக்குள் வருவதை அங்கீகரிக்கவேண்டும் என்றும் காசா வின் இனரீதியான குடிப்பரம்பலில் மாற்றம் இருக்கக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

**மதிப்பாய்வுடனான அணுகுமுறை**

அமெரிக்காவின் தலைமையிலான சர்வதேச கடற்படையில் இணைந்து கொள்வதற்கு இலங்கையின் போர்க்கப்பல்களை செங்கடலுக்கு அனுப்புவதற்கு ஜனாதிபதி எடுத்த சர்ச்சைக்குரிய தீர்மானத்துக்கு பிறகு இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் முஸ்லிம்களின் உணர்வுகளை சாந்தப்படுத்துவதற்கு பெருமளவு உதவக்கூடியதாக ஜனாதிபதியின் உச்சிமகாநாட்டு உரை அமைந்தது

சுதந்திரமான கப்பல் போக்குவரத்துக்காக ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இலங்கைக் கடற்படைக் கப்பல்களை அனுப்புவதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானம் இலங்கையில் உள்ள மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்கள் அவரைச் சந்தித்துப் பேசவேண்டிய அவசியத்தை உருவாக்கியது.

சனத்தொகையில் கால்வாசிக்கும் அதிகமானவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஒரு நாட்டைப் பொறுத்தவரை பெரும் செலவுபிடிக்கின்ற ஒரு கடற்படை நடவடிக்கையில் இறங்குவது கட்டுப்படியாகாத ஒன்று என்று கடுமையான விசனமும் வெளிப்படுத் தப்பட்டு வருகிறது. அத்துடன் பலஸ்தீனப் போராட்டத்துக்கு உணர்ச்சிபூர்வமாக ஒருமைப்பாட்டை வெளிக்காட்டும் இலங்கை முஸ்லிம் மக்களின் உணர்வுகளை அவமதிப்பதாகவும் ஜனாதிபதியின் தீர்மானம் அமைந்தது.

> **நாட்டுக்குள் மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் அரசாங்கத்தினால் வென்றெடுக்க இயலுமா என்பது முக்கியமான கேள்வி. பிரதான தமிழ்க் கட்சியின் புதிய தலைவர் தேர்தலில் மிதவாத வேட்பாளரின் தோல்வி மேலும் பல விடயங்களைச் செய்யவேண்டிய தேவையை உணர்த்திநிற்கிறது.**

நாட்டின் நலன்களை சர்வதேச சமூகத்தின் முன்னால் முன்னுரிமைப் படுத்தும் அக்கறை காரணமாகவே ஜனாதிபதி பெருவாரியன வெளிநாட்டுப் விஜயங்களை மேற்கொள்கிறார் என்று அடிக்கடி வெளிநாடுகளுக்கு சென்று வருவதற்கு ஒரு நியாயப்பாட்டை அவரின் சீடர்களில் ஒருவரான ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரான வஜிர அபேவர்தன முன்வைக்கிறார். மேலதிக செலவினங்கள் நாட்டுக்கு கட்டுப்படியாகாத ஒரு நேரத்தில் பெருமளவு பணத்தை ஜனாதிபதி செலவு செய்கிறார் என்ற ஒரு விமர்சனம் இருக்கிறது.

ஒன்றரை வருட காலத்தில் நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்து அபிவிருத்தப் பாதையில் நகர்த்துவதற்கான தனது முயற்சிகளின் விளைவாக இலங்கைமீது உலகின் கவனத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க திருப்பியிருப்பதாகவும் அதற்காக தனது வெளிநாட்டு விஜயங்களை அவர் பயனுறுதியுடைய முறையில் பயன்படுத்தியிருப்பதாக அபேவர்தன கூறுகிறார்.

உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் போன்ற சர்வதேச நிறுவனங்களினதும் பல்வேறு நாடுகளினதும் ஆதரவுடன் இலங்கையை முன்னேற்றுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நாட்டுக்கு உச்சபட்ச பயன்களைப் பெறுவதற்காக செங்கடலுக்கு மதிப் பாய்ந்த ஒரு வெளியுறவுக் கொள்கையை ஜனாதிபதி கடைப்பிடிக்கிறார் என்று தெரிகிறது. கடற்படையை அனுப்பும் தீர்மானத்தில் இருந்து ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ பின்வாங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

உகண்டாவில் அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாட்டில் ஜனாதிபதியின் உரையின் முற்பகுதியைப் போன்றே பிற்பகுதியும் நிச்சயம் பாராட்டவேண்டியதாக இருக்கிறது. அணிசேரா நாடுகள் குழுவுக்கு அறிவுத்திறனுடைய தலைமைத்துவம் ஒன்றின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். வடக்கு - தெற்கு பிளவு குறித்தும் தெற்கு உலகம் தன்முனைப்புடன் செயற்படவேண்டிய அவசியம் குறித்தும் அவர் உணர்ச்சியைக் கிளறும் வகையில் பேசினார்.

"எமது உறுப்பு நாடுகள் இனிமேலும் பலவீனமான அரசுகளின் ஒரு குழுவாக இல்லை. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க பிராந்தியங்களின் சில நாடுகளின் துரித முன்னேற்றம் மற்றும் பொருளாதார மேம்பாட்டின் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டது எனபதை நாம் அங்கீகரிக்கவேண்டும். 2050 ஆம் ஆண்டளவில் உலகின் பத்து முன்னணி பொருளாதாரங்களில் பெரும்பாலானவை அணிசேரா இயக்கத்துக்கு சொந்தமானவையாக விளங்கும். அவை தலைமைத்துவத்தை வழங்குவதற்கு தயாராக வேண்டும்" என்று விக்கிரமசிங்க தனதுரையில் கூறினார்.

**நம்பிக்கையை வென்றெடுத்தல்**

அணிசேரா உச்சிமகாநாட்டில் பங்கேற்ற 120 நாடுகளில் அனேகமாக அரைவாசி நாடுகள் ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்தவை என்கிற அதேவேளை அவற்றின் ஆதரவு இலங்கைக்கு தேவை என்பதை கருத்திற் கொண்டதாகவே கம்பாலாவில் ஜனாதிபதியின் செயற்பாடுகள் அமைந்தன.

"இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்" என்ற தொனிப்பொருளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட 46-1, 51-1 தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் எதிர்வரும் மார்ச்சிலும் பிறகு செப்டெம்பரிலும் பேரவையின் கூட்டத்தொடர்களில் ஆராயப்படவிருக்கிறது.

உள்நாட்டுப்போர் 2009 ஆண்டில் முடிவுக்கு வந்த பிறகு இலங்கை மனித உரிமைகள் பேரவையின் அறிவுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகிறது. பேரவையில் ஒரு தடவை மாத்திரம் வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. போருக்கு பின்னரான பிரச்சினைகளை கையாளுவதில் இலங்கை அக்கறையுடன் செய்படுவதாக கலாநிதி தயான் ஜெயதிலக தலைமையிலான இராஜதந்திரிகள் குழுவினரால் தெற்கு உலகின் நாடுகளை நம்பவைக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் அதற்கு பிறகு தீர்மானங்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச சமூகத்தின்...

மீதான சகல வாக்கெடுப்புக்களிலும் இலங்கை தோல்வி கண்டது. மனித உரிமைகள் பேரவைக்கு அளித்தை உறுதிமொழிகளை இலங்கை நிறைவேற்றத் தவறியதே அந்த தோல்விகளுக்கான காரணமாகும்.

தற்போது போருக்கு பின்னரான நீதி யைப் பொறுத்தவரை இலங்கை நிறை வேற்றுவதற்கு பல உறுதிமொழிகள் இருக்கின்றன.

இலங்கையில் பதவியில் இருந்த அர சாங்கங்கள் உறுதிமொழிகளைக் காப் பாற்றத் தவறியதனால் சர்வதேச மனித உரிமைகள் சமூகம் “இலங்கையில் இடம்பெற்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனி தாபிமான உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களையும் சான்றுகளையும் திரட்டுவதற்கும் எதிர்காலப் பொறுப்புக் கூறலுக்கான செயன்முறை களுக்கு சாத்தியமான திட்டங்களை வகுப்பதற்கும் பலியானவர்களுக்கும் உயிர்தப்பிய வர்களுக்கும் நீதி கிடைப்ப தற்காக குரல்கொடுப்பதற்கும் தகுதி வாய்ந்த நியாயாதிக்கமுடைய உறுப்பு நாடுகளில் பொருத்தமான நீதிச் செயன் முறைகளை முன்னெடுப்பதற்கும் உதவியாக ஜெனீவாவில் சர்வதேச தரவு திரட்டல் பிரிவு ஒன்றை அமைத்திருக்கிறது.

ஆனால், உகண்டாவில் ஜனாதிபதி முன்னெடுத்த ஆதரவு திரட்டும் முயற்சிகளுக்கு பிறகு இலங்கை மீண்டும் ஒரு தடவை (2009 ஆம் ஆண்டில் இடம் பெற்றதைப் போன்று) மனித உரிமைகள் பேரவையின் பெரும்பான்மையான உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெறக் கூடியதாக இருக்கும்.

காசா பள்ளத்தாக்கில் மனித உரிமை களைப் பாதுகாப்பதற்கு இயலாமற் போன சூழ்நிலைகளில் ஐக்கிய நாடுக ளின் நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டிருக் கின்றமையால் இலங்கை தற்போது சர்வதேச ரீதியில் ஆதரவைத் திரட்டும் பணிகள் சுலபமாகிவிட்டன எனலாம்.

இந்த மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஒன்றின் மூலமாக நல்லிணக்கப் பெ ாறிமுறை களை குறிப்பாக தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவல கத்தை அமைக்கும் செயன்முறைகளை முன்னெடுப்பதில் வெற்றிகாண முடியும் என்று அரசாங்கம் இரண்டு மடங்கு நம்பிக்கையுடன் இருக்கிறது. உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டமூலம் இப்போது வர்த்த மானியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் இந்த முன்முயற்சிகள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கத் தவறுவதற்கு வாய்ப்பில்லை. அரசாங்கம் சர்வதேச அரங்கில் அதன் போராட்டங்க ளை ஒவ்வொன்றாக வென்றுகொண்டு வருகிறது.

ஆனால் நாட்டுக்குள் மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் அரசாங்கத்தினால் வென்றெடுக்க இயலுமா என்பது முக்கியமான கேள்வி. பிரதான தமிழ்க் கட்சியின் புதிய தலை வர் தேர்தலில் மிதவாத வேட்பாளரின் தோல்வி மேலும் பல விடயங்களைச் செய்யவேண்டிய தேவையை உணர்த்தி நிற்கிறது. ●





